விநாயகர் ஸ்துதி

நூல்

திருப்பரங்குன்றம்

விநாயகர் ஸ்துதி

1. கைத்தல நிறைகனி
2. பக்கரை விசித்ர மணி
3. உம்பர் தரு
4. நினது திருவடி

நூல்

5. முத்தைத் தரு

திருப்பரங்குன்றம்

6. உனைத்தினம்
7. கரு வடைந்து
8. கனகந்திரள்கின்ற
9. சந்ததம் பந்த
10. தடக்கைப் பங்கயம்

விநாயகர் ஸ்துதி

(1) நாட்டை (ஐ) (–) ஆதி

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள் புய மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபம் ஆகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் பெருமானே

விநாயகர் ஸ்துதி

(1) திருக்கரத்திலே நிறையப் பழம், அப்பம், அவல், பொரி இவைகளை (கப்பிய) வாரியுண்ணும் யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானது திருவடிகளை விரும்பி

கற்கும் அடியவர்களுடைய புத்தியில் உறைபவனே! கற்பகமே எனக் கூறினால் வினைகள் விரைவில் ஓடிப்போகும் (ஆதலால்)

ஊமத்தம் பூவையும், நிலவையும் தரித்துள்ள சிவபெருமான மகனும், மற்போருக்குத் தக திரண்ட புயத்தையுடைய மதங்களைப் பொழிகின்ற யானை முகத்தை உடையவனும்

மத்தளம் போன்ற வயிற்றை உடையவனும், உத்தமியாகிய பார்வதியின் மகனும் ஆகிய கணபதியை, வாசனை அவிழ்ந்து வீசும் மலர் கொண்டு (அர்ச்சித்து) வணங்குவேன்

மூன்று தமிழின் முறையினை, மலைகளில் முற்பட்டதான மேரு மலையில் முதல் முதலிற் பொருந்த எழுதின எல்லாத் தேவர்களுக்கும் முதன்மையானவரே

மூன்று புரங்களையும் எரித்த அந்தச் சிவன் எழுந்தருளிய ரதத்தின் அச்சைப் பொடி செய்த மிக்க தீரனே!

(வள்ளிநாயகிக்கு அருள வேண்டுமென்ற) அத்துயரத்தொடு சுப்பிரமணி சென்ற, அந்தத் தினைப்புனத்திடை யானையாகித் தோன்றி

அந்தக்குற மகளாம் வள்ளியுடன், அந்தச் சிறிய முருகவேளை அப்பொழுதே மணம் புரிவித்த பெருமானே.

② நாட்டை/மோகனம் (உ) ஆதி-கண்டநடை

பக்கரை விசித்ர மணி பொற்கலணை இட்ட, நடை
பட்சியெனும் உக்ர துர கமும், நீப
பக்குவ மலர்த்தொடையும், அக்குவடு பட்டொழிய
பட்டு உருவ விட்டு அருள் கை வடிவேலும்

திக்கது மதிக்க வரு குக்குடமும், ரட்சைதரு
சிற்றடியும், முற்றிய பன்னிரு தோளும்
செய்ப்பதியும் வைத்து உயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பு என எனக்கு அருள்கை மறவேனே

இக்கு அவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன் நெய்
எள் பொரி அவல் துவரை இளநீர், வண்டு
எச்சில் பயறு அப்பவகை பச்சரிசி பிட்டு வெள
ரிப் பழம் இடிப்பல் வகை தனிமூலம்
மிக்க அடிசில் கடலை பட்சணம் எனக்கொள் ஒரு
விக்கின சமர்த்தன் எனும் அருள் ஆழி
வெற்ப, குடிலச் சடில, விற்பரமர் அப்பர் அருள்
வித்தக, மருப்புடைய, பெருமானே

② "அங்கவடி, பொழகான மணி, பொன் (நிறத்த) சேணம். இவைகளைப்
பூண்டு, நடக்கும் பறவையாகிய உக்கிரமுடைய (மயிலாம்) குதிரையும்,
([illegible])
மலர்கின்ற பக்குவத்தில் தொடுத்த (நீப) கடம்ப மலர் மாலையையும், அந்த
கிரௌஞ்ச மலை அழிந்தொழியும்படி, அதன் மேற் பட்டு ஊடுருவிச் செல்
லும்படி, விட்டருளிய திருக்கரத்தில் உள்ள கூரிய வேலையும்
திக்குகள் மதிக்கும்படி எழுந்துள்ள சேவலையும், காத்தளிக்கும் சிறிய
திருவடிகளையும், திரண்டுள்ள பன்னிரண்டு தோள்களையும்
வயலூரையும் வைத்து, உயர்ந்த திருப்புகழ் பாக்களை விருப்பமொடு
சொல்லுக" எனக் கூறி எனக்கு அருள் செய்ததை மறவேன்;
கரும்பு, அவரை, நல்ல பழங்கள், சர்க்கரை, பருப்பு, அதனுடன் நெய்,
எள், பொரி, அவல், துவரை, இளநீர், (வண்டின் -
(வண்டு எச்சில்) தேன், பயறு, அப்ப வகைகள், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப் பழம்,
(இடி) மாவு - பல வகையன, ஒப்பற்ற (மூலம்) கிழங்குகள்
மிகுந்த அன்னம், கடலை இவைகளைப் பட்சணமாகக் கொள்ளும் ஒப்பற்றவரும்,
விக்கினத்தை உண்டு பண்ணவும் நீக்கவும் வல்லவருமாகிய அருட் கடலே!
மலையில் வசிப்பவரும், வளைந்த சடாபாரத்தை உடையவரும், பினாகம் என்னும்
வில்லையும் உடையவரும், பெரிய பொருளும், உலகங்களுக்குத் தந்தையு
மாகிய சிவபெருமான் அருளிய ஞான சொரூபரே, தந்தத்தை உடைய
பெருமானே

மருவு மலர் புனை தோத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வனச பரிபுர பொற்பத அர்ச்சனை — மறவேனே

தெனன தென தென தெத்தெனப் பல
சிறிய அறுபதம் மொய்த்(த) உதிரப்புனல்
திரளும் உறு சதை பித்த நிணக்குடல் — செறிமூளை
செரும உதர நிரப்பு செருக்குடல்
நிரைய அரவ நிறைத்த களத்திடை
திமித திமி மத்தள(ம்) இடக்கைகள் — செகசேசே
எனவே, துகுதுகு துத்தென, ஒத்துகள்,
துடிகள் இடி மிக ஒத்து முழக்கிட
டமட டமு டமு டட்டம் எனத் தவில் — எழும் ஓசை
திகலி அலகைகள் கைப்பறை கொட்டிட
இரண பயிரவி சுற்று நடித்திட
எதிரு நிசிசரரைப் பெலியிட்டருள் — பெருமானே

(விநாயகருக்கென்று) பொருந்திய மலர் கொண்டு வழிபட்டும், துதிப்பதற்குரிய தோத்திரச் சொற்களைக் கொண்டு துதித்தும், தூக்கிய கைகளால் குழையுடைய காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போட்டும், சிரசில் குட்டிக்கொண்டும், அவரது தாமரை போன்ற சிலம்பு அணிந்த அழகிய பாதங்களில் அர்ச்சனை செய்வதை மறவேன்

தெனன தென தென தெத்தென என்ற ஒலியுடன் பல சிறிய ஈக்கள் மொய்க்கும் ரத்த நீர், திரண்டுள்ள சதைகள். பித்த மாமிசக் குடல் நெருங்கிய மூளை

நிரம்பிய அவ்வயிற்றில் நிறைந்து மிக்க குடல், வரிசையாக ஓசைகள் - இவை நிறைந்த போர்க்களத்தின் நடுவில். திமித திமி திமி என ஒலிக்கும் மத்தளம், இடக்கை எனும் வாத்தியங்கள், செகசேசே என ஒலிக்க.

என ஒலிக்க. துகுதுகு துத் என்று ஊதும் ஊதுகுழலுடன், உடுக்கைப் பறைகள் இடியென மிக ஒத்து முழங்க, டமட டமுட டமு டட்டம் எனத் தவில் சப்திக்கவும்

(நன்றேபொன்று) பகைத்த பேய்கள் கைப்பறை கொட்ட, ரணபயிரவி என்னும் தேவதை சுற்றிக் கூத்தாட, எதிர்த்து வந்த அசுரர்களை அழித்தருளிய பெருமானே.

(3) ஹம்ஸத்வனி/ஆனந்த பைரவி (8) (4½ + 1+1½ + 3) / ஆதி

உம்பர் தரு, தேநு, மணிக் — கசிவாகி
ஒண் கடலில் தேன் அமுதத்து — உணர்வு ஊறி

இன்ப ரசத்தே பருகி — பல காலும்
என்றன் உயிர்க்கு ஆதர(வு) உற்று — அருள்வாயே
தம்பி தனக்காக வனத்து — அணைவோனே
தந்தை வலத்தால் அருள் கைக் — கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் — பொருளோனே
ஐந்து கரத்து ஆனைமுகப் — பெருமானே

(3) விண்ணவர் உலகிலுள்ள கற்பக விருக்ஷம், காமதேநு, சிந்தாமணி இவைகளைப் போல் என் மனமானது கசிந்து அன்புடையதாகியும்
ஒளி வீசும் பாற் கடலில் தோன்றிய இனிய அமுதம் போன்ற ஞான உணர்ச்சி ஊற்றெடுத்தும் (அதனால் பிறக்கும்)
இன்பச் சாற்றினை (நான்) பலகாலம் பருகியும் மகிழுமாறு
எனது உயிரின் மீது ஆதரவு வைத்து அருள்வாயாக
தம்பியின் பொருட்டு கானகத்தில் (யானை வடிவம் கொண்டு) சென்றவனே!
தந்தையை வலம் செய்ததால் கையில் அருள்பெற்ற பழத்தை உடையவனே
அன்பர்களுக்கு வேண்டிய நிலைத்த வரம் பொருளாய் உள்ளவனே
ஐந்து கரங்களையும் ஆனைமுகத்தையும் கொண்ட பெருமானே

(4) ஹம்ஸத்வனி (7½) (ப) (1½+2+4)

நினது திருவடி, சத்தி, மயில், கொடி
நினைவு கருதிடு புத்தி கொடுத்திட,
நிறைய அமுது செய் முப்பழம் அப்பமும் — நிகழ்பால் தேன்
நெடிய வளைமுறி. இக்கொடு. லட்டுகம்
நிறவில் அரிசி, பருப்பு. அவல், எள், பொரி
நிகரில் இனி கதலிக்கனி வர்க்கமும் — இளநீரும்
மனது மகிழ்வொடு தொட்ட கரத்து. ஒரு
மகர ஜலநிதி வைத்த துதிக்கர
வளரு கரிமுக ஒற்றை மருப்பனை — வலமாக

(4) (முருகா!) உன்னுடைய திருவடி, வேல், மயில், சேவற் கொடி (இவைகளை) (மறவாமல்) நினைவில் வைத்து தியானிக்கின்ற அறிவை நான் பெற வேண்டி, நிரம்பச் செய்யப்பட்ட அமுது, முப்பழம், அப்பம், புதிய பால் தேன்

நீண்டு வளைந்த முறுக்கு, கரும்பு, லட்டு, நிறமும் ஒளியும் உள்ள அரிசி பருப்பு. அவல், எள். பொரி, ஒப்பற்ற இனிய வாழைப்பழ வகைகள் இளநீர் (இவைகளை)
மன மகிழ்ச்சியுடன் தொடும் திருக்கரத்தையும், ஒப்பற்ற மகர மீன்கள் உள்ள கடலில் வைத்த துதிக்கையையும், பெருமை வளர்கின்ற யானை முகத்து ஒற்றைக் கொம்பனை (விநாயகரை) வலம் வந்து

(5) தௌனி (7) 1300

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கு இறை சத்திச் சரவண
முத்திக்கு ஒரு வித்து குருபர எனவோதும்
முக்கட் பரமற்குச், சுருதியின்
முற்பட்டது கற்பித்து, இருவரும்,
முப்பத்து மூவர்க்கத்து அமரரும் அடிபேண
பத்துத் தலை தத்தக் கணை தொடு,
ஒற்றைக் கிரி மத்தைப் பொருது, ஒரு
பட்டப் பகல் வட்டத் திகிரியில் இரவாக
பத்தற்கு இரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்சித்து அருள்வதும் ஒருநாளே!
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக், கழுகொடு கழுது ஆட
திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் த்ரிகடக... என ஓத
கொத்துப் பறை கொட்டக், களமிசை
குக்குக் குகு குகு குக்குக் குகு குகு
குத்திப் புதை புக்குப் பிடியென முது கூகை

(5) முத்தை நிகர்த்த வரிசையாக அமைந்த பற்களையுடைய (இள நகையையுடைய) தெய்வயானை அம்மையாருக்கு இறைவ! சக்திவேற்படையை தாங்கிய சரவண! முத்திக்கு ஒப்பற்ற விதையாக (மூலகாரணமாக) இருப்பவரே! குருபரனே! என ஓதுகின்ற/துதிக்கின்ற.

மூன்று கண்களைக் கொண்ட சிவபெருமானுக்கு, வேதத்திற்கு முற்பட்டு நிற்கும் பிரணவத்தைக் கற்பித்தும், பிரம விட்டுணுக்களாம் இருவரும் முப்பத்து முக்கோடி தேவர்களும், திருவடியை வணங்கவும்;

(இராவணனுடைய) பத்துத் தலைகளும் சிதறும்படி அம்பை ஏவியும், ஒப்பற்ற மந்தரமலையாகிய மத்தால் திருப்பாற்கடலைக் கலக்கியும், ஒரு பட்டப்பகலை, வட்டமாயுள்ள (தனது) சக்கரம் கொண்டு இரவாக்கியும் பக்தனாகிய அருச்சுனனுடைய தேரை நடத்தின, பச்சை மேகம் போன்ற (திருமால்) மெச்சுவதற்கு தகுந்த பரம்பொருளே! அன்பொடு காப்பாற்றி அருள் புரிவதாகிய ஒரு நாளும் உளதோ!

'தித்தித்தெய' என்னும் தாளத்துக்கு ஒத்த வகையில், (பரிபுர) சிலம்பணிந்த நடனப் பதத்தை வைத்து பயிரவி, திக்குகளில் சுழன்று நடிக்கவும், கழுகுடன் பேய்கள் ஆடவும்

திக்குகளைக் (பரி) காக்கும், அஷ்ட பயிரவர்கள், 'தொக்குத் தொகு தொகு, தொக்குத் தொகு தொகு' என வரும் அழகிய மண்டலக் கூத்தை ஆடி, 'த்ரிகடக' என்னும் ஓசையைக் கூறவும்

கூட்டமாகப் பறைகள் கொட்டவும், போர்க்களத்தில் 'குக்குக் குகு குகு குக்குக் குகு குகு குத்திப் புதை புக்குப் பிடி' என்று ஒலி செய்து கிழக் கோட்டான்கள்

கொட்பு உற்று எழு நட்பற்ற அவுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமானே

வட்டமிட்டு மேலே எழவும், நட்பு அற்ற நிருதர் கூட்டங்களை வெட்டிப் பலியிட்டுக் குலகிரியாகிய கிரௌஞ்ச மலையைக் குத்துப் படத் தாக்கிப் போர் செய்ய வல்ல பெருமானே

திருப்பரங்குன்றம்

⑥ ஸாவேரி (8) (மு) ஆதி

உனைத்தினம் தொழுதிலன், உனது இயல்பினை
உரைத்திலன், பல மலர் கொடு உன் அடியிணை
உறப் பணிந்திலன், ஒரு தவம் இலன், உனது அருள் மாறு

உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்,
விருப்பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்,
உவப்பொடு உன் புகழ் துதி செய விழைகிலன், மலை போலே
கனைத்து எழும் பகடு அது பிடர் மிசை வரு
கறுத்த வெஞ்சின மறலி தன் உழையினர்
கதித்து அடர்ந்து, எறி கயிறு, அடு கதை கொடு பொருபோதே

கலக்குறச் செயல் ஒழிவற அழிவுறு
கருத்து நைந்து அலம் உறு பொழுது, அளவை கொள்
கணத்தில் என் பயம் அற மயில் முதுகினில் வருவாயே (மு)

திருப்பரங்குன்றம்

⑥ (நான்) உன்னைத் தினந்தோறும் தொழுவதும் இல்லை, உன்னுடைய அருட் குணங்களை (எடுத்து) உரைப்பதும் இல்லை; பல மலர்களைக் கொண்டு அர்ச்சித்து உனது இரண்டு திருவடிகளிலும் (சென்னியானது) பொருந்துமாறு நமஸ்காரம் புரிகின்றேனில்லை; ஒப்பற்ற தவமும் செய்கின்றேனில்லை; உன்னுடைய அருள் நீங்காத

உள்ளத்தை உடைய அன்பர்கள் உறையும் இடத்தை அறிகின்றதும் இல்லை; விருப்பத்தொடு உன் கிரியை வலம் வருகின்றதும் இல்லை; மகிழ்ச்சியொடு உன் புகழைத் துதிக்க விருப்பம் கொள்வதும் இல்லை; மலை போலத் (தோன்றி)

கனைத்துக் கொண்டு வருகின்ற, எருமையின் பிடரியின் மீது வருகின்ற, கரிய நிறமும், கொடுங்கோபமுமுள்ள, யமனிடம் உள்ளவர்கள் (யமதூதர்கள்) (என்முன்) தோன்றி நெருங்கி, எறிகின்ற கயிறு கொண்டும், வருத்தும் கதை கொண்டும் (என்னுடன்) போர் செய்கின்ற போது

(என்) கலக்கப்படும் செயலும், ஓய்தலின்றி அழிவுறும் கருத்தும் நைந்து போய் (நான்) துன்புறும் போது, ஒரு கண அளவில், என் பயம் நீங்க மயில் முதுகினில் (நீ) வருவாயாக

வினைத்தலம் தனில் அலகைகள் குதி கொள
விழுக்கு உடைந்து மெய் உகு தசை கழுகு உண
விரித்த குஞ்சியர் எனும், அவுணரை அமர் புரிவேலா
மிகுத்த பண் பயில் குயில் மொழி, அழகிய
கொடிச்சி, குங்கும முலைமுகடு உழு, நறை
விரைத்த சந்தன மிருகமத புய வரை உடையோனே (மு)

போர்க்களத்தில் பேய்கள் கூத்தாட, ஊன் (மாமிசம்) உடைந்து, (விலங்குகளின்) உடலினின்றும் சிந்துகின்ற தசைகளை, கழுகுகள் உண்ண, 'விரித்த தலைமயிரை உடையவர்' என்னும் அசுரர்களொடு போர்புரிந்த வேலனே!
மிக்க பண்களைப் பயிலும், குயிலையொத்த இனிய மொழியை உடையவளும் அழகிய மலைநிலத்துப் பெண்ணுமாகிய (வள்ளியின்) குங்குமம் அணிந்த மலை போன்ற தனபாரங்களின் உச்சியில் அழுந்திப் படும் (நறை விரைத்த) வாசனை கமழும் சந்தனமும் கஸ்தூரியும் படிந்த புய மலைகளை உடையவனே!

தினம் தினம், சதுர்மறை முநி, முறை கொடு
புனல் சொரிந்து, அலர் பொதிய, விணவரொடு
சினத்தை நிந்தனை செயும் முநிவரர் தொழ மகிழ்வோனே

தினந்தோறும், நான்கு வேதங்களையும் உணர்ந்த பிரமன், வேதாகம முறைப்படி, நீரால் அபிஷேகம் செய்து, மலர்களால் (அர்ச்சித்து) மூட, விண்ணவரும், சினத்தை நிந்தித்து விலக்கின (சினத்தை வென்ற) முநிவர்களும் தொழ மகிழ்வோனே!

தெனத் தெனந்தன என, வரி அளி, நறை
தெவிட்ட, அன்பொடு பருகு, உயர் பொழில் திகழ்
திருப்பரங்கிரி தனில் உறை சரவண பெருமாளே (மு)

'தெனத் தெனந்தன' என்று, வரிகளையுடைய வண்டுகள், தேனைத் தெவிட்டுமளவுக்கு ஆசையொடு உண்ணும், உயர்ந்த பூஞ்சோலைகள் விளங்குகின்ற திருப்பரங்குன்றத்தில் உறைந்தருளும் சரவண! பெருமாளே!

---

(7) ஹிந்தோளம் / வராளி (7) (௬) ($1\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}+1\frac{1}{2}$)

கரு அடைந்து பத்து உற்ற திங்கள்
வயிறு இருந்து முற்றி பயின்று
கடையில் வந்து உதித்துக் குழந்தை வடிவாகி
கழுவி அங்கு எடுத்துச் சுரந்த
முலை அருந்துவிக்கக் கிடந்து
கதறி அங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி

(7) கருப்பையைச் சேர்ந்து, பத்து மாதங்கள் வயிற்றில் இருந்து, முதிர்ந்து ஒலித்துக் கொண்டு, கடைசியில் (பூமியில்) குழந்தை வடிவாக வந்து உதித்து

குழந்தையைக் கழுவி, அங்கு எடுத்துச் சுரக்கும் முலைப்பாலை (அருந்துவிக்க) ஊட்டக், கிடந்தும், அழுதும், அங்கை கொட்டியும் தவழ்ந்தும், நடமாடியும்

அரை வடங்கள் கட்டிச், சதங்கை
இடு குதம்பை, பொற் சுட்டி, தண்டை
அவை அணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி
அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணி உழன்று சுற்றித் திரிந்தது
அமையும், உன் க்ருபைச் சித்தம் என்று பெறுவேனோ (மு)

இரவி, இந்திரன் வெற்றிக் குரங்கின்
அரசரென்றும், ஒப்பற்ற உந்தி
இறைவன் எண்கு இனக் கர்த்தன் என்றும் நெடு நீலன்

எரியது என்றும், ருத்ரற், சிறந்த
அநுமன் என்றும், ஒப்பற்ற அண்டர்
எவரும் இந்த வர்க்கத்தில் வந்து புனமேவ
அரிய தன் படைக் கர்த்தரென்று
அசுரர் தம் கிளைக் கட்டை வென்ற
அரி முகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே

அயனையும் புடைத்துச் சினந்த
உலகமும் படைத்துப் பரிந்து
அருள் பரங்கிரிக்குள் சிறந்த பெருமாளே (மு)

அரை நாண் கட்டியும், சதங்கை, இட்ட காதணி, பொன் சுட்டி, தண்டை அவைகளை அணிந்தும், முற்றிச் செழிப்புற்று வளர்ந்து வயது ஏறி

அருமையான பெண்களுடைய நட்பைப் பூண்டு, பிணியிற் பட்டு சுழற்சியை அடைந்து, சுற்றித் திரிந்தது (அமையும்) போதும்; (முருகா!) உனது க்ருபைச் சித்தத்தை என்று பெறுவேனோ?

சூரியனும், தேவேந்திரனும், வெற்றியையுடைய வானரங்களுக்கு அரசர்களாகவும் (சுக்ரீவன், வாலியாகவும்), ஒப்பிலாத திருமால் உந்தியிற் பிறந்த பிரமன், கரடியினத்துத் தலைவன் ஜாம்பவனாகவும், நெடிய நீலன்

அக்கினி என்றும், ருத்திரன், சிறந்த ~~அநுமன்~~ அநுமனாகவும், ஒப்பிலாத தேவர்கள் யாவரும் இவ்வகையாக வந்து பூமியிற் சேர

(இவர்களை) தன் அரிய படைகளுக்குத் தலைவராகக் கொண்டு அசுரர்களுடைய சுற்றமெண்ணும் கூட்டத்தை வென்ற (அரி) பாவங்களை நீக்குபவரும், (முகுந்தன்) முக்தியைக் கொடுப்பவருமாகிய திருமால் மெச்சுகின்ற குணம் வாய்ந்த மருகனே!

பிரமனையும் தண்டித்துக் கோபித்து, உலகத்தையும் படைத்து அன்புடன் அருள் பாலிக்கும் திருப்பரங்குன்றத்திற் சிறந்து வீற்றிருக்கும் பெருமானே.

(8) சங்கராபரணம்/நீலாம்பரி (7) (ப) 1300

கனகம் திரண்கின்ற பெருங்கிரி
தனில் வந்து தகண் தகண் என்றிடு
கதிர் மிக்கிய செண்டை எறிந்திடு — கதிரோனே
கடம் மிஞ்சி அநந்த விதம் புணர்
கவளந்தனை உண்டு வளர்ந்திடு
கரியின் துணை என்று பிறந்திடு — முருகோனே
பனகந் துயில்கின்ற திறம்புனை
கடல் முன்பு கடைந்த பரம்பரர்
படரும் புயல் என்றவர் அன்பு கொள் — மருகோனே
பல துன்பம் உழன்று கலங்கிய
சிறியன் புலையன் கொலையன் புரி
பவம் இன்று கழிந்திட வந்துஅருள் — புரிவாயே
அனகன் பெயர் நின்று உருளும் திரி
புரமும் திரி, வென்றிட, இன்புடன்
அழல் உந்த நகுந்திறல் கொண்டவர் — புதல்வோனே

அடல் வந்து முழங்கியிடும் பறை
டுடு டுண் டுடு டுண் டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்ட நெரிந்திட — வருதரர்
மனமும் தழல் சென்றிட, அன்றவர்
உடலும் குடலும் கிழி கொண்டிட
மயில் வென் தனில் வந்து அருளும் கன — பெரியோனே

(8) பொன் திரண்டுள்ள பெரிய மலையாகிய மேரு மலையை அடைந்து
தக தக வென்று மின்னுகின்ற, ஒளி மிகுந்த செண்டாயுதத்தை
எறிந்திட்ட (எறிந்து அடித்த) திறலோனே/

மதம் மிகுந்து, அளவில்லாத வகைகளாகப் புரிந்த பட்சணக்
கனி கவள அளவாக எடுத்து உண்டு வளருவதுமான, யானையின்
உருவங் கொண்ட கணபதிக்கு சகோதரராகத் தோன்றிய முருகோனே/
பாம்பாகிய ஆதிசேடன் மீது துயில்கின்ற திறம் வாய்ந்தவரும்,
பாற்கடலை முன்பு கடைந்தவருமான பரம்பொருளாக விளங்குபவரும்
பரந்த மேக நிறத்தவருமான திருமால் அன்பு கொள்ளும் மருகனே/.
பல துன்பங்களிற் சுழற்சியுண்டு கலங்கிய, சிறியனும், புலா
லுண்பவனும், கொலைகாரனுமான நான் செய்த பாவங்கள்
எல்லாம் இன்றோடு அழிந்து போகும்படி வந்து அருள் புரிவாயே
(அனகன்) பாவமில்லாதவன் என்கிற பெயருடன் நிலைபெற்றிருந்து,
உருண்டு திரியும் திரிபுரங்களையும் வெல்லும்படி, இன்பத்துடன்,
தீ வெளிப்பட (நகுந்) நகைத்த, திறல் கொண்டவருமான சிவ பெரு
மானின் புதல்வனே
வலிமையுடன் முழங்குகின்ற பறை டுடு டுண் டுடு டுண் டுடுடுண்
டெனஒலிக்க, அதிர்ந்த அண்டங்கள் நெரிந்து போகுமாறு
வந்த சூரர்களது
மனத்தில் எரி பாயவும், அப்போது அவர் உடலும், குடலும்
கிழிபடவும், மயில் முதுகினில் (ஏறி) வந்தருளிய பெருமை
வாய்ந்த பெரியோனே

மதியும் கதிரும் தடவும்படி
உயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று பரங்கிரி வந்தருள் பெருமானே

சந்திரனும் சூரியனும் தடவிச் செல்லும் அளவுக்கு உயர்ந்துள்ள சோலைகள் சூழ்ந்துள்ள வளம் பொருந்திய திருப்பரங் குன்றத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே

---

௭ ஹிந்தோளம் (7½) ரூ (1+½+2+3)

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தன் என்று உற்று உனை நாளும்

கண்டு கொண்டு அன்பு உற்றிடுவேனோ

தந்தியின் கொம்பைப் புணர்வோனே

சங்கரன் பங்கில் சிவை பாலா

செந்தில் அம் கண்டிக் கதிர் வேலா

தென் பரங்குன்றில் பெருமானே

௭

எப்போதும் பாசத் தொடர்பினாலே
கவலையுற்று சோர்ந்து திரியாமல்
கந்தனே பரம்பொருள் என்று உணர்ந்து மனம் பொருந்தி உன்னை சதாகாலமும்
உனக் கண்டால் பார்த்து அன்பு கொள்வேனோ.

யானை வளர்த்த பூங்கொம்பு போன்ற தேவசேனையைச் சேர்பவனே

சங்கரன் பக்கத்திலுள்ள பார்வதியின் குமரனே

திருச்செந்தூர், அழகிய கண்டி எனும் தலங்களில் உறையும் ஒளிவீசும் வேலாயுதனே
தென்னாட்டிலே விளங்கும் திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளிய பெருமானே.

(10) ஆனந்த பைரவி (4½) (+) 2+1½+1

தடக்கைப் பங்கயம் கொடைக்குக் கொண்டல்
தண் தமிழ்க்குத் தஞ்சம் என்று உலகோரை
தவித்துச் சென்று இரந்து உளத்தில் புண்படும்
தளர்ச்சிப் பம்பரம் தனை, ஊசல்
கடத்தைத் துன்ப மண் சடத்தைத், துஞ்சிடும்
கலத்தைப், பஞ்ச இந்த் ரிய வாழ்வை
கணத்தில் சென்று இடம் திருத்தித் தண்டை அம்
கழற்குத் தொண்டு கொண்டு அருள்வாயே

படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சை மன் பணியாகப்

பணித்துத் தம் பயம் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடும் தனிவேலா
குடக்குத் தென்பரம் பொருப்பிற் தங்கும்அம்
குலத்திற் கங்கை தன் சிறியோனே
குறப் பொற்தொம்பை முன் புனத்திற் செங்கரம்
குவித்துக் கும்பிடும் பெருமானே

(10) (உனது) விசாலமான கையானது தாமரை (பதுமநிதி) யாகும்
கொடைச் சிறப்பில் (நீ) மேகம் போல் ஆவாய்; தண்ணிய தமிழுக்கு
(தமிழ்ப் புலவருக்கு) நீயே அடைக்கலம் என்று உலகத்தவரிடம்
தவிப்புடன் சென்று யாசித்து, உள்ளம் புண்பட்டுத் தளர்ச்சியுறும்
இந்தப் பம்பரத்தை, பதனழியும்
பாண்டத்தை, துன்பத்துக்கு ஈடாய மண் உடலை, அழிந்து போம்
பாண்டத்தை, ஐந்து இந்திரியங்களுடன் கூடிய அடியேனிடம்
நொடிப் பொழுதில் வந்து, (என் நெஞ்சமாம்) இடத்தைத் திருத்தித்
தண்டை அணிந்த (உன்) அழகிய திருவடிக்குத் தொண்டு செய்யும்
படி அருள்வாயாக.
படைப்பதற்குத் தாமரையோன் (பிரமன்) அழிப்பதற்குச் சங்கரன்
காப்பதற்கு இலக்குமியின் நாயகன் திருமால், என அவரவர்
பணியாக
நியமித்து, அவர் தம் பயங்களை நீக்கி, எப்போதும் தலைமையாக
வீற்றிருக்கும் ஒப்பற்ற வேலாயுதக் கடவுளே!
(மதுரைக்கு) மேற்கே. அழகிய திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கும்
அழகிய (உயர்) குலக் கங்கா தேவியின் குழந்தையே
குறக்குலத்து அழகிய கொம்பு போன்ற வள்ளி பிராட்டியை,
முற்காலத்தில் தினைப்புனத்தில் செவ்விய கரங்களைக் குவித்துக்
கும்பிட்ட பெருமானே.

திருச்செந்தூர்

எண்	பாடல்	எண்	பாடல்
11	அந்தகன் வருந்	34	தொந்தி சரிய
12	அமுதுததி விட	35	தோலொடு மூடிய
13	அருணமணி மேவு	36	நாலுமைந்து
14	அவனி பெறுந்	37	நிதிக்குப் பிங்க
15	அறிவழிய மயல்	38	நிலையாப் பொருளை
16	அனைவரு மருண்	39	பஞ்ச பாதக முறு
17	இயலிசையில்	40	படர்புவியின்
18	இருக்குங் காரண	41	பரிமள களப
19	உததியறல்	42	புகரப் புங்க
20	ஏவினை நேர்விழி	43	பூரண வார
21	ஓராதொன்றை	44	மங்கை சிறுவர்
22	கட்டழகு விட்டு	45	மனத்தின் பங்
23	கண்டு மொழி	46	முந்து தமிழ்
24	கமல மாதுடன்	47	முனைச்சங்கோலிடு
25	காவனர் வெங்	48	மூப்புற்று செவி
26	குடர்நிண மென்பு	49	மூளும் வினை சேர
27	கொம்பனையார்	50	வஞ்சங்கொண்டு
28	சேமக் கோமள	51	வஞ்சத்துட னொரு
29	தண்டே னுண்டே	52	வந்து வந்து முன்
30	தண்டையணி	53	வரியார் கருங்
31	தந்த பசிதனை	54	விந்ததினூறி
32	தரிக்குங்கலை	55	விறல் மாரனை
33	துன்பங்கொண்	56	வெங்காளம்

திருச்செந்தூர்

(11) ஹிந்தோளம் 150 (ல) 1+1½+1½+1+2 (7)

அந்தகன் வருந்தினம் பிறகிடச்,
சந்ததமும் வந்து கண்(டு) அரிவையர்க்கு
அன்புருகு சங்கதம் தவிர, முக் குணமாள
அந்தி பகல் என்றிரண்டையும் ஒழித்து
இந்திரிய சஞ்சலங்களை அறுத்(து)
அம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடி
செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வு உற
கந்தனை அறிந்(து) அறிந்து, அறிவினில்
சென்று, செருகும் தடம் தெளி தரத், தணியாத
சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து உரை ஒழித்து
என் செயல் அழிந்து அழிந்து அழிய, மெய்ச்
சிந்தை வர என்று நின் தெரிசனைப் படுவேனோ
கொந்தவிழ் சரண் சரண் சரண் என
கும்பிடு புரந்தரன் பதி பெற
குஞ்சரி குயம் புயம் பெற, அரக் கருமாள
குன்றிடிய, அம் பொனின் திருவரைக்
கிண் கிணி கிணின் கிணின் கிணின் என
குண்டலம் அசைந்(து) இளம் குழைகளில் ப்ரபை வீசத்
தந்தன தனந் தனந் தன என
செஞ்சிறு சதங்கை கொஞ்சிட மணித்
தண்டைகள் கலின் கலின் கலின் எனத் திருவான

(11) அந்தகன் வருந்தினம் = கூற்றுவன் வரும் நாளில் (அவன்)
பிறகிட = புறங் கொடுத்து ஓடவும்,
சந்ததமும் வந்து கண்டு = எப்போதும் போவதும் காண்பதுமாய்
அரிவையர்க்கு = பெண்களிடத்தில்
அன்பு உருகு = அன்பு வைத்து மனம் உருகுகின்ற
சங்கதம் தவிர = நட்பானது நீங்கவும்
முக்குணம் மாள = சத்துவம், இராசதம், தாமசம் என்ற மூன்று குணங்களும் அழிய
அந்தி பகல் = கேவல சகலம்; அந்தி (மறப்பு); பகல் (நினைப்பு)
ஆன்மா செயலற்று கிடந்து உழலும் நிலை-
தேகமெடுத்து பிறப்பு இறப்புக்கு உட்படும் நிலை
என்றிரண்டையும்... = என்ற இரண்டு நிலைகளையும் ஒழித்து
இந்திரிய ... = ஐம்பொறிகளால் வரும் துன்பங்களையும் அறுத்து
அம்புயபதங்களின் = தாமரை (போன்ற) உனது திருவடிகளின்
பெருமையை ... = பெருமைகளைக் கவியில் அமைத்துப் பாடி
செந்திலை.... = திருச்செந்திலைக் கருதி உணர்ந்து ஞானம் பிறக்க
கந்தனை அறிந்து அறிந்து = கந்தவேளாம் உன்னை அறிந்து அறிந்து
அறிவினில் சென்று = அந்த அறிவின் வழியே போய்
செருகும் தடம் தெளிதர = உண்மைப் பொருளைச் சேருகின்ற முத்தி நெறி
இன்னதென்று தெளிவடையவும்
தணியாத சிந்தை... = அடங்காத மனமும் நெகிழ்ந்து நெகிழ்ந்து
உரை ஒழித்து = உரை ஒழிந்து
என் செயல் ... = என் செயலால் எல்லாம் நடைபெறுகின்றது என்ற
தற்போதமானது அடியோடு அழியவும். உண்மையான
அறிவு உண்டாகவும், எப்பொழுது உன் தெரிசனம்
கிடைக்கப் பெறுவேனோ.

11 சங்கரி மனம் குழைந்து உருக முத்
தம் தர வரும் செழுந்தளர் நடை
சந்ததி, சகம் தொழும் சரவணப் பெருமானே

(11) கொந்தவிழ் சரண் = பூங்கொத்துக்கள் மலர்ந்து கிடக்கும் திருவடிகளை
சரணெனக் . . . = சரணம் சரணம் என்று கும்பிட்ட
புரந்தரன் பதிபெற = இந்திரன் தனது ஊரைப் பெற
குஞ்சரி குயம் = (யானை வளர்த்த மகளாம்) தேவசேனையின் தனம்
புயம் பெற = (உனது) திருப்புயங்களைப் பெற
அரக்கரு மாள = அரக்கர்களும் மாண்டழிய
குன்றிடிய = கிரவுஞ்சம் பொடிபட்டு விழ
அம்பொனின் . . = அழகிய பொன்னாலாகிய திருவரையிலுள்ள சதங்
கையானது கிண் கிணி கிணின் கிணின் என
குண்டலம் . . . = (காதில் அணிந்துள்ள) குண்டலங்கள் அசைந்தலாவ
சிறிய (குழைகளில்) காதணிகளில் ஒளி வீச
தந்தன தனந் தனந் தன என்று செப்பிய சிறு சதங்கைகள்
சிற்றொலி செய்ய, மணித் தண்டைகள் கலின் கலின் என்று [illegible]
திருவான சங்கரி: சகல மங்கலங்களுக்கும் உறைவிடமான பார்வதி
மனம் குழைந்துருக முத்தம் தர வரும்
சந்ததி = இளங்குமரனே
சகம் தொழும் சரவணப் பெருமானே

(12) கல்யாணி (1+1½)+(1+1½)+4 (7) 1500

அமுது (உ)ததி விடம் உமிழ் செங்கட், திங்கட்
பகலின் ஒளிர் வெளி(று) எயிறு, துஞ்சற் குஞ்சித்
தலையும் உடையவன் அரவ தண்டச் சண்டச் சமன் தலை

அது வரும் அளவில் உயிர் அங்கிட்டு இங்குப்
பறை திமில் திமிர்தமிகு தம்பட்டம் பல
கறைய உறவினர் அலற, (உந்திச் சந்தித் தெருவூடே)

எமது பொருள் எனும் மருளே இன்றி, குன்றிற்
பிளவளவு தினையளவு பங்கிட்(டு) உண்கைக்கு
இளையு,முது வசை தவிர இன்றைக்கு அன்றைக்கு என நாடாது

இடுக கடிது எனும் உணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடு டுடுடுடு டுண்டிட் டுண்டுட்
என அகலு நெறி கருதி நெஞ்சத்து அஞ்சி பகிராதோ (மு)

(12) அமுது உததி ... = பாற்கடலில் தோன்றிய விஷத்தைக் கக்கும்
செங்கட் = சிவந்த கண்களையும்
திங்கட் பகலின் ஒளிர் = சந்திரனது பிளவை(பிறை) போற் பிரகாசிக்கும்
வெளிறு எயிறு = வெண்மையான பற்களையும்
துஞ்சற் .... உடையவன் = தொங்குகின்ற மயிர்த் தலையையும் உடையவனும்
அரவ, தண்ட = பேரொலியும் தண்டாயுதமும்
சண்டச் சமன் தலை = கொடுங் கோபமும் கொண்டவனுமான யமனுடைய 32
அது வரும் அளவில் = அது வரும் போது
உயிர் அங்கிட்டு = ஆவி யமனுலகிற் செல்ல
இங்கு = (உடலிருக்கும்) இவ்விடத்திலே
பறை திமில (திமிர்த மிகு) ஒலி மிகுந்த தம்பட்டம்
பல் கறைய ... = பலவிதமாக ஒலிக்கவும், உறவினர் அலறவும்.
எமது ... = எம்முடைய பொருள் என்னும் பற்று இல்லாமல்
குன்றிற் ... = ஒருகுன்றிமணியிற் பிளவளவு, தினையளவு கூட
பங்கிட்டு உண்கைக்கு = பங்கிட்டு உண்ணுதற்குச்
இளையு, முது வசை தவிர = சோர்வு பட்ட பெரும்பழி நீங்க
இன்றைக் .. = இன்றைக்கு ஆகட்டும் நாளைக்கு ஆகட்டும் என எண்ணாமல்
இடுக கடி... = இடுவாயாக உடனே என்னும் உணர்வு அழிந்துபோய்
உந்திச் சந்தி தெருவூடே = (பிணத்தை) எடுத்துக் கொண்டு சந்தி (பல தெருக்கள் கூடும் இடம்) தெருவழியே
டுடுடுடு டுடுடுடு டுண்டுட் டுண்டுட் என்ற பறை ஒலியுடன் கொண்டு போகின்ற
நெறி கருதி = விதியை நினைத்து
நெஞ்சத்து அஞ்சி.. = (நாமும் ஒரு நாளைக்குச் செல்ல வேண்டி வரும் என்று) பயந்து பகிர்ந்து கொடேனோ.

(12) குமுத பதி வகிர், அமுது சிந்தச் சிந்தச்
சரண பரிபுர, சுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடில சடை பவுரி கொடு தொங்கப் பங்கிற் கொடியாட

குல தடினி அசைய இசை பொங்கப் பொங்க
கழல் அதிர டெகு டெகுட டெங்கட் டெங்கத்
தொகு குகுகு தொகுகுகு தொங்கத் தொங்கத் தொகு தீதோ

திமிதமென முழவொலி முழங்கச், செம் கைத்
தமருகம் அது அதிர் சதியொடு, அன்பர்க்(கு) இன்பத்
திறம் உதவும், பரதகுரு வந்திக்கும், சற் குருநாதா

திரளுமணி தரளம் உயர் தெங்கிற் தங்கிப்
புரள, எறிதிரை, மகர சங்கத் துங்கத்
திமிர சலநிதி தழுவு செந்திற் கந்தப் பெருமானே (மு)

(12) குமுத பதி வகிர் =(தலையிற் சூடியுள்ள) குமுத (அம்பல்) மலரின் பதியாகிய
சந்திரனின் (வகிர்) பிளவு - பிறை

அமுது சிந்த சிந்த: அமுதத்தை மிகச் சிந்தவும்

சரண பரிபுர: திருவடியில் அணிந்துள்ள சிலம்பானது

சுருதி ... = வேத மொழிகளைக் மிகக் கொஞ்சி ஒலிக்கவும்

குடில சடை .. = வளைந்த சடையானது மண்டலமிட்டு சுழன்று தொங்கவும்

பங்கிற் கொடி ஆட = பக்கத்திலுள்ள கொடி போன்ற பார்வதி ஆடவும்

குல தடினி அசைய = சிறந்த (கங்கை) ஆறு அசையவும்

இசை பொங்க.. = இசையொலி மிகப் பொங்கி எழவும்

கழல் அதிர = (பாதத்தில் அணிந்துள்ள) கழல்கள் அதிர்ந்து ஒலிக்கவும்

டெகு டெகுட டெங்கட் டெங்கத் தொகு குகுகு தொகு குகு ...
தொங்கத் தொங்கத் தொகு தீதோ (என்னும்)

திமிதமென... = பேரொலியுடன் முழவு வாத்தியம் முழங்கவும்

செம்கை தமருகம் = சிவந்த கரத்திலுள்ள உடுக்கையானது

அது அதிர் சதியொடு: அதிர்ந்தொலிக்கும் தாள ஒலியுடன்.

அன்பர்க்கு ... = அன்பர்களுக்கு இன்ப நிலையை உதவுகின்ற

பரதகுரு .... = நடன குருவாகிய சிவன் வணங்கும் சற்குருநாதனே

திரளு.... புரள = திரண்ட மணியும் முத்தும், உயர்ந்துள்ள தென்னை
மரங்களில் தங்கிப் புரளும்படி

எறிதிரை, மகர : வீசுகின்ற அலைகளையும், மகர மீன்களையும்

சங்கத் துங்க : சங்கங்களையும் (உடைய) தூய

திமிர சலநிதி.. = கருநிறக் கடல் அணைந்துள்ள திருச்செந்தூரிற்
கந்தப் பெருமானே

(13) புன்னாக வராளி (24) (1+½+½+2)+(1+½+½+2)+(1+½+½+2) / (4)(½+½+3)

அருண மணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவ விசால பூரண
அம்பொற் கும்பத் தனமோதி
அளி குலவு மாதர் லீலையின், முழுகி அபிஷேகம் ஈது என
அறவும் உறவு ஆடி, நீடிய
அங்கை கொங்கைக்கு இதமாகி
இருள் நிறை அம் ஓதி மாலிகை, சருவி உறவான வேளையில்
இழை கலைய மாதரார் வழி
இன்புற்று அன்புற்று அழியா / நீள்

இரவு பகல் மோகன் ஆகியெ படியில் மடியாமல் யானும் உன்
இணை அடிகள் பாடி வாழ, என்
நெஞ்சில் செஞ்சொல் தருவாயே:

தருண மணி ஆடு அரா அணி, குடில சடில ஆதி, ஓதிய
சதுர் மறையின் ஆதியாகிய
சங்க துங்க குழையாளர்

தரு முருக,

அருணமணி... பூஷித = சிவந்த மணிகளால் அலங்கரிக்கப்பட்டதாய்
ம்ருகமதபடீர லேபன = கஸ்தூரி, சந்தனம் இவைகளின் கலவை பூசினதும்
அபிநவ - - - = புதுமை வாய்ந்ததும், அகன்றதும், நிறைந்ததும்
அம் பொற் கும்பத்... = அழகிய பொற்குடம் போன்ற தனங்களில் மோதும்
அளி... லீலையில் = ஆசையுடன் குலாவுகின்ற மாதர்களின் விளையாட்டு
அபிஷேகம் ஈதென முழுகி = திருமஞ்சனம் இதுவே என்று முழுகி
அறவும் உறவு ஆடி = மிகவும் அவர்களுடன் உறவாடி
நீடிய அங்கை.... = நீண்ட அழகிய கைக்கும் தனத்துக்கும் இன்பம் உண்டா வகை
இருள் நிறை... = கருமை நிறைந்த அழகிய கூந்தலில் உள்ள
மாலிகை - - = பூமாலை, கொஞ்சிக் குலவி உறவு கொள்ளும் வேளையில்
இழை கலைய - - = ஆபரணங்களுடன் கலைய, மாதர்களிடத்தே
இன்புற்று - - - = இன்புற்றும், அன்பு கொண்டும் அழிகின்றவனாகி
நீள் இரவு - - - = நீண்ட இரவும் பகலும் மோகம் கொண்டவனாகி
படியில் - - - = இப் பூமியில் வீணே மாண்டு போகாமல்
யானும் உன் - - - = அடியேனும் உமது திருவடிகளைப் பாடி வாழுமாறு
என் நெஞ்சில்... = எனது உள்ளத்தில் செவ்விய சொற்களைத் தந்தருள்வாயாக
தருண மணி - - - = இளமையையும், இரத்ன மணிகளையும் ஆடலையும்
உடைய பாம்பை அணிந்துள்ள
குடில சடில ஆதி = வளைந்த சடையையுடைய ஆதிப்பொருளும்
ஓதிய சதுர் - - - = ஓதியுள்ள நான்மறையின் ஆதிப்பொருளும்
துங்க சங்க குழை = தூய சங்கினாலாய குழையை அணிந்த
பெருமாகிய சிவபெருமான்
(தரு முருக) தந்தருளிய முருகனே

(13) தருமுக, மேக சாயலர், தமர மகர ஆழி சூழ் புவி
தனை முழுதும் வாரியே அமுது
உண்டிட்டு, அண்டர்க்கு   அருள் கூரும்;
செரு முதலி, மேவு மாவலி அதி மத கபோல மாமலை
தெளிவினுடன் மூலமே என
முந்த சிந்தித்து   அருள் மாயன்

திரு மருக, சூரன் மார்பொடு, கிலை உருவ வேலை ஏவிய
ஜெய சரவண, மனோகர,
செந்திற் கந்தப்   பெருமானே

(13) மேக சாயலர் . . . = மேக வண்ணத்தரும், (தமர) ஒலிக்கின்றதும் 12
மகர மீன்கள் வாழும் கடல் சூழ்ந்த இப்புவி
முழுதும் வாரியே . . = முழுமையும் வாரி அமுதென உண்டு
அண்டர்க்கு . . . = தேவர்களுக்கு அருள் பாலித்த
செரு முதலி, . . . = போரில் முதன்மையாளரும்,
மேவு மாவலி, அதி . . . . = விரும்பிய, மிக்க வலிமையையும், அதிக மதத்தைக்
கொண்ட கன்னத்தையும் கொண்ட, பெரிய மலை
போன்ற கஜேந்திரன்
தெளிவுடன் மூலமே . . = தெளிந்த அறிவுடன் ஆதிமூலமே என்றழைக்க
முந்த சிந்தித்து . . = முற்பட்டு (கருணையுடன்) சிந்தித்து அருள் புரிந்த திருமாலின்
திரு மருக, சூரன் . . = திரு மருகனே! சூரன் மார்பொடு
கிலை உருவ — . = (ஏழு) மலைகளும் உருவிச் செல்லும்படி வேற்படையை
ஏவிய, ஜெய சரவணனே! மனத்திற்கு இன்பம் தருபவரே
செந்திற் கந்தப் . . = திருச்செந்தூர்க் கந்தப் பெருமானே.

(14) தமான் (6) (+) 04
அவனி பெறும் தோட்(டு) அம்பொற்
குழை அடர் அம்பாற் புண்பட்(டு)
அரிவையர் தம் பாற் கொங்கைக்கு   இடையே சென்(று)
அனை தரு பண்டாட்டம் கற்(று)
உருகிய கொண்டாட்டம் பெற்(று)
அழி தரு திண்டாட்டம் சற்(று)   ஒழியாதே

(14) அவனி . . . அடர் = பூமியையே விலைமதிக்கும்படியான தோடு விளங்கும்
அழகிய பொற்குழை விளங்கும் செவி வரை நீண்டுள்ள
அம்பாற் புண்பட்டு = அம்பு போன்ற கண்களால் (மனம்) புண்பட்டு
அரிவையர் . . . = மாதர்களின் தனங்களுக்கு இடையில் சென்று
அனை தரு . . . கற்று = தருகின்ற பழைய ஆட்டங்கள் (காம லீலைகள்) கற்று
உருகிய . . . பெற்று = உருகிய பெருங்களிப்பைப் பெற்று
அழி தரு . . . = (பின்னர்) அழிவைத் தரும் திண்டாட்டம் கொஞ்சம்
ஒழியக் கூடாதோ! (உ. கொஞ்சமேனும் ஒழியாது)

(14) பவம் அற நெஞ்சாற் சிந்தித்(து)
இலகு கடம்(பு) ஆர்த் தண்டை
பத யுகளம் போற்றும் கொற் — றமும், நாளும்
பதறிய அங்காப்பும், பத்
தியும் அறிவும் போய்ச், சங்கைப்
படு துயர் கண்பார்த்(து) அன்புற்(று) — அருளாயோ

தவநெறி குன்றாப் பண்பிற்
துறவினரும் தோற்று அஞ்சத்
தனி மலர் அஞ்சு ஆர் புங்கத்து — அமர் ஆடி

தமிழ் இனி தென்கால் கன்றில்
திரிதரு, கஞ்சாக் கன்றைத்
தழல் எழ வென்றோர்க்(கு), அன்று — அற்புதமாக

சிவ வடிவம் காட்டும், சற்
குருபர, தென்பால் சங்கத்
திரள் மணி சிந்தாச் சிந்துக் — கரைமோதும்

(14) பவம் அற . . = பிறப்பு ஒழிய வேண்டி மனதில் சிந்தனை செய்து
இலகு . . . = அழகிய கடப்ப மலர்கள் நிறைந்து, தண்டையணிந்து விளங்கும்
பத யுகளம் = அடிகள் இரண்டையும் வணங்கிப் போற்றும்
கொற்றமும் நாளும் = திடவீரமும், நாள் தோறும்
பதறிய அங்காப்பும் = (நாளும் திருவருளை நாடிப்) பதறுகின்ற (அருள் கிட்டுமா என்று வாய் பிளக்கும்) ஆசைப்பாடும்
(அங்காப்பு – வாய் பிளத்தல்)
பத்தியும் . . . = பத்தியும் அறிவும் இல்லாமல் போய
சங்கைப் . . . = அச்சமுறும் துயரில் (நான்) வருந்தப் படுவதை (நீ) கண் பார்த்து அன்புற்று அருள மாட்டாயா!

தவநெறி . . . = தவநெறி குறையாத குணத்தினராம் துறவிகள் கூட
தோற்று . . = தோல்வியுற்று அஞ்சும்படி
தனி மலர் . . . = ஒப்பற்ற ஐந்து மலர்கள் நிறைந்த அம்பைக் கொண்டு
அமர் ஆடி = போர் செய்து
தமிழ் இனி . . . = தமிழ் போல இனிய இளம் தென்றல் காற்றில்
திரிதரு = உலவுகின்ற
கஞ்சாக் கன்றை = இலக்குமி குமரனை (மன்மதனை). (கஞ்சை : திருமகள்)
தழல் எழ . . = நெருப்பு எழ எரித்து வென்ற சிவபெருமானுக்கு அன்று அற்புதமாக
சிவவடிவம் ... குருபர = பேரின்ப உண்மை மங்கலப் பொருளை எடுத்துக் காட்டி உபதேசித்த உத்தமமான குருநாதரே
தென்பால = தென் திசையில்
சங்கத் . . . = சங்குகளின் கூட்டங்கள் மணிகளைச் சிந்தும் கடலானது கரையில் மோதுகின்றதும்

தினகர திண் தேர் சண்டப்
பரி இடறும் கோட்(டு) இஞ்சித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமானே.

(15) காம்போதி (2½) (-) 1+1½

அறிவு அழிய மயல் பெருக உரையும் அற விழிசுழல
அனல் அவிய மலம் ஒழுக அகலாதே
அனையும் மனை அருகில் உற வெருவி அழ உறவும் அழ
அழலின் நிகர் மறலி எனை அழையாதே (மு)
செறியும் இருவினை கரண, மருவு புலன் ஒழிய, உயர்
திருவடியில் அணுக வரம் அருள்வாயே
சிவனை நிகர் பொதியவரை முனிவன் அக மகிழ இரு
செவிகுளிர இனிய தமிழ் பகர்வோனே (மு)
நெறிதவறி அலரி மதி நடுவன் மகபதி முளரி
நிருதி நிதிபதி கரிய வனமாலி

நிலவு மறையவன் இவர்கள் அலைய அரசுரிமை புரி
நிருதன் உரம் அற அயிலை விடுவோனே (மு)

மறி பரசு கரம் இலகு பரமன் உமை இருவிழியும்
மகிழ மடி மிசை வளரும் இளையோனே

தினகர திண் தேர் : சூரியனுடைய வலிமை மிக்க தேரிலுள்ள
சண்டப் பரி இடறும் : வேகமுள்ள குதிரைகள் இடறுகின்ற
கோட்டு இஞ்சி = (உயரமான) சிகரங்களை உடைய மதில் சூழ்ந்துள்ளது மான
திரு வளர் - - - = (லட்சுமீகரம்) செல்வம் வளர்கின்ற
திருச்செந்தூர்க் கந்தப் பெருமானே.

(15) அறிவு அழியவும், மயக்கம் பெருகவும், பேச்சு அடங்கவும்
கண்கள் சுழலவும், (உடற்) சூடு தணியவும், மலம் ஒழுகவும்,
(என்னை விட்டு) நீங்காமலே
தாயும் மனைவியும் பக்கத்திலேயே இருந்து அச்சமுற்று அழ, உறவினரும்
அழ, நெருப்புக்கு ஒப்பான யமன் என்னை அழையாதபடி;
நெருங்கியுள்ள இரு வினைகளும், மனமும், பொருந்திய ஐம்புலன்களும்
செயலற்று நீங்க, உயர்ந்த (உனது) திருவடியில் சேருமாறு வரம் அரு...
சிவனுக்கு ஒப்பான பொதியமலை முனிவனும் அகத்தியருக்கு உள்ளம் மகிழ
இரு செவிகளும் குளிர, இனிய தமிழை ஓதினவனே.
அற நெறியினின்றும் வழுவி, சூரியன், சந்திரன், யமன், இந்திரன்
அக்கினி, (தென்மேற்றிசைக்கு அதிபனாகிய) நிருதி, குபேரன்,
கருநிறமுள்ள துளவ மாலை அணிந்த திருமால்
நிலைபெற்ற வராகிய பிரமன் ஆகிய இவர்கள் யாவரும் அலையும்படி
அரசாட்சி செய்த, அசுரனாகிய சூரனது மார்பு பிளக்குமாறு வேலைச்
செலுத்தினவனே!
மான் மழு (இவை) திருக்கையில் விளங்கும் பரமன், உமை இவர்தம்
இரு விழிகளும் மகிழ்ச்சி கொள்ள, அவர் தம் மடியில் வளர
இளையோனே.

மதலை தவழ் உததியிடை வரு, தரள மணி, புளினம்
மறைய, உயர், கரையில் உறை பெருமாளே (மு)

(16) மோகனம் (5½) (–) 1+1½+1½+1½

அனைவரு(ம்) மருண்டு அருண்டு கடிதென வெகுண்டு இயம்ப
அமர அடி பின் தொடர்ந்து பிண நாறும்

அழுகு பிணி கொண்டு, விண்டு புழுவுடன் எலும்பு அலம்பும்
அவல உடலம் சுமந்து தடுமாறி

மனை தொறும் இதம் பகர்ந்து வர வர விருந்(து) அருந்தி
மன வழி திரிந்து மங்கும் வசைதீர

மறை சதுர் விதம் தெரிந்து, வகை சிறு சதங்கை கொஞ்ச
மலரடி வணங்க என்று பெறுவேனோ (மு)

தினை மிசை சுகம் கடிந்த, புன மயில் இளங் குரும்பை
திகழ், இரு தனம் புணர்ந்த திரு மார்பா

மரக்கலங்கள் தவழ்கின்ற கடலிடையே வருகின்ற, முத்து மணிகள், (புளினம்) மணற் குன்றுகள் மறையுமாறு உயர்ந்துள்ள (திருச்செந்தூர்) கடற் கரையில் எழுந்தருளியுள்ள பெருமானே.

(16) அனைவரும் .... = (உற்ற பெரு நோயைக் கண்டு) யாவரும் அச்சம் கொண்டும் மனக்குழப்பம் கொண்டும்

கடிதென - - - = விரைவில் (அகலுக) என்று கோபித்துக் கூறவும்

அமர - - - = (விடாது) (அமர) நெருங்கி அவர்கள் அடிப்பின்னே தொடர்ந்து, பிணம் போல நாறுகின்றதும்

அழுகு - - = அழுகிப் போம் நிலையைத் தருவதான நோய் கொண்டு

விண்டு புழு . . . = வெளிவரும் புழுவுடன் எலும்புகள் நிலைகுலையும்

அவல உடலம் . . = துன்ப உடலைச் சுமந்து தடுமாற்றம் அடைந்து

மனை தொறும் . . = வீடுகள் தோறும் போய் இதமான மொழிகளைச் சொல்லி

வர வர - . . = போகப் போகப் புதிய புதிய வீடுகளில் உணவு உண்டு

மன வழி . . = மனம் போன வழியில் திரிந்து அழிகின்ற பழிப்பு நீங்க

மறை சதுர் . . = வேதங்கள் நான்கின் வகைகளை அறிந்து

வகை சிறு . . = முறைப்படி சிறிய சதங்கைகள் கொஞ்சுகின்ற

மலரடி . . = மலர் போன்ற திருவடியை வணங்கும் (பாக்கியத்தை) என்று பெறுவேனோ!

தினை மிசை சுகம் . . = தினை மீதிருந்த கிளிகளை ஓட்டிய

புன - . . . திகழ் = புனத்திலிருந்த, மயில் போல் விளங்கும் வள்ளி பிராட்டியாருடைய, இளம் குரும்பை போல விளங்கும்

இரு தனம் - . = இரண்டு கொங்கைகளை அணைந்த அழகிய மார்பனே

(16) ஜெக முழுதும் முன்பு, தும்பி முகவனொடு, தந்தை முன்பு
திகிரி வலம் வந்த செம்பொன் மயில் வீரா
இனிய கனி மந்தி சிந்து மலைகிழவ, செந்தில் வந்த
இறைவ, குக, கந்த, என்றும் இளையோனே
எழு கடலும், எண் சிலம்பும், நிசிசரும் அஞ்ச, அஞ்சும்
இமையவரை அஞ்சல் என்ற பெருமானே (ழ)

உலக முழுமையும் முன்பு, யானை முகவனொடு (போட்டியிட்டுத்) தந்தை (சிவபிரானது) முன்னிலையில், வட்டமாகச் (சக்ரவாள கிரியை) வலம் வந்த செம்பொன் மயில் வீரனே!
இனிமையான கனிகளைக் குரங்குகள் சிந்துகின்ற, மலைகளுக்கு உரிமை கொண்டவனே! திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனே! குகனே! கந்தனே! என்றும் இளையவனே!
ஏழு கடலும் அஷ்ட கிரியும், அசுரர்களும் அஞ்சும்படி, அஞ்சுகின்ற தேவர்களை அஞ்சாதீர்கள் என்று அபயம் அளித்த பெருமானே.

(17) ஹம்ஸ த்வனி (9) (ரூ) (1+1½+1½+2+3)
இயல் இசையில் உசித வஞ்சிக்கு அயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித்து உழலாதே
உயர் கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி
உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே
மயில் தகர் கல் இடையர் அந்தத் தினைகாவல்
வனச குறமகளை வந்தித்து அணைவோனே
கயிலைமலை அனைய செந்தில் பதி வாழ்வே
கரிமுகவன் இளைய கந்தப் பெருமானே

(17) உடற் சாயலிலும், இசைப் பயிற்சியிலும் மேன்மை பெற்றுள்ள, கொடி போன்ற இடையையுடைய மாதர்கள் காரணமாய் தளர்வு அடைந்து, இரவும் பகலும் (மனது) அவர்களையே சிந்தனை செய்து அலையாமல் (உனது) உயர்ந்த கருணையால் வரும் இன்பக் கடலில் மூழ்கி
உன்னை எனது உள்ளத்திலே அறியும் அன்பைத் தந்தருளுவாயாக
மயிலும் ஆடும் (நிறைந்த) மலையிடையே (வசிக்கும்) வேடர்களுடைய அந்தத் தினைப்புனக் காவலைப் பூண்டிருந்த
இலக்குமி போன்ற குறத்தியை (வள்ளியை) வணங்கி அணைந்தவனே
கயிலை மலை போலப் (புனிதமான) திருச்செந்தூர்ப் பதியில் வாழ்பவனே
யானை முகவனுக்கு (கணபதிக்கு) இளைய கந்தப் பெருமானே.

(18) <u>சுத்த தன்யாசி</u> (7½) — (1½+2+4)

இருக்கும், காரண(ம்) மீறிய வேதமும்
இசைக்கும் சாரமுமே தொழு தேவர்கள்
இடுக்கண் தீர் கனனே, அடியார் தவ — முடன் மேவி
இலக்கம் தான் எனவே தொழவே மகிழ்
விருப்பம் கூர் தரும் ஆதியுமாய், உலகு
இறுக்கும் தாதகி சூடிய வேணியன் — அருள் பாலா

திருக்கும் தாபதர் வேதியர் ஆதியர்
துதிக்கும் தாளுடை நாயகனாகிய
செகச் செஞ்சோதியும் ஆகிய மாதவன் — மருகோனே

செழிக்கும் சாலியும் . மேகம் அளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையுமே திகழ்
திருச்செந்தூர் தனில் மேவிய தேவர்கள் — பெருமானே (மு)

அருக்கன் போல் ஒளி வீசிய மாமுடி
அனைத்தும் தான், அழகாய் நலமே தர
அருட்கண் பார்வையினால் அடியார் தமை — மகிழ்வோடே
அழைத்தும் சேதிகள் பேசிய காரண
வடிப்பம் தான் எனவே என நாள் தொறும்
அதிக்கம் சேர் தரவே அருளால் உடன் — இனி(து) ஆள்வாய் (மு)

(18) இருக்கும் .. வேதமும் = இருக்கு வேதமும் . காரணங்களைக் கடந்து நிற்கும் ஏனைய வேதங்களும்
இசைக்கும் .. = மொழிகின்ற சாரமான பொருளைத் தொழுது நெருங்கும் தேவர்களது
இடுக்கண் .. = துன்பங்களைத் தீர்க்கும் பெருமை வாய்ந்தவரே!
அடியார் - - = அடியார்கள் தவ நெறியில் நின்று
இலக்கம் - - = லட்சக்கணக்காய் நின்று தொழ, மகிழ்ந்து
விருப்பம் . . = (அவர்கள் மீது) விருப்பம் மிகக் கொள்ளும் ஆதிப்பிரானாய்
உலகு இறுக்கும் .. = உலகை அழிக்கும் மூர்த்தியாய்
தாதகி - . . = ஆத்திமலர் சூடிய சடைப்பெருமானாய் உன்னை
(சிவபெருமான்) அருளிய திருக்குமாரரே!

திருக்கும் தாபதர் = திரிகாலங்களையும் காணவல்ல தவசிரேஷ்டர்கள்
வேதியர் - - = வேதியர் முதலானோர் துதிக்கும் திருவடிகளையுடைய
நாயகனாகிய - - - = பெருமானாகிய உலகத்துப் பேரொளியாய் விளங்கும்
திருமாலின் மருகனே!

செழிக்கும் - - = செழிப்புள்ள செந்நெற் பயிரும், மேகத்தை எட்டும்படி
(வளர்ந்துள்ள) கரும்புச் சோலையும், வாழைகளுமே
பொலிகின்ற திருச்செந்தூரில் வீற்றிருக்கும், தேவர்கள் பெருமானே

அருக்கன்... தான் = சூரியன் போல ஒளி வீசும் திருமுடிகளெல்லாம்
அழகாய் - - - = அழகாக விளங்கி நன்மையே வழங்க
அருட்கண் . . = அருட்கண் பார்வை கொண்டு அடியார்களை மகிழ்ச்சியுடனே
அழைத்தும் . . = அழைத்தும் (அவர்களோடு) ஞானச் செய்திகளைப்
பேசுகின்ற மூலப் பொருளே!
வடிப்பம் . . = செப்பம் (திருந்திய குணம்) உள்ளவன் தான் இவன் என்று
சொல்லும்படி, என்னை, தினந்தோறும் மென்மேலும் மேன்மை
யடையும் வண்ணம் திருவருள் பாலித்து (உடன்) இப்பொழுதே
இனிமையுடன் ஆட்கொண்டருள்வீர்.

(19) கீரவாணி (6½) ← (1+1½+1½+1½+1)

உததி அறல் மொண்டு சூல் கொள், கரு
முகில் என இருண்ட நீல மிக
ஒளி திகழும் மன்றல் ஓதி, நரை — பஞ்சு போல் ஆய்
உதிரம் ஒழு துங்க வேல விழி
மிடை கடை ஒதுங்கு பீளைகளும்
முடை தயிர் பிதிர்ந்ததோ இது என — வெம் புலால் ஆய்

மத கரட தந்தி வாயின் இடை
சொருகு பிறை தந்த, சூதுகளின்
வடிவு தரு கும்ப மோதி வளர் — தொங்கை தோலாய்

வனம் அழியு மங்கை மாதர்களின்
நிலை தனை உணர்ந்து தாளில் உறு
வழி அடிமை அன்பு கூரும் அது — சிந்தியேனோ (மு)

இதழ் பொதி அவிழ்ந்த தாமரையின்
மணம் அறை புகுந்த நான்முகனும்,
எறிதிரை அலம்பு பால் உததி — நஞ்சு அரா மேல்
இரு விழி துயின்ற நாரணனும்
உமை மருவு சந்த்ர சேகரனும்
இமையவர் வணங்கு வாசவனும் — நின்று தாழும்

உததி அறல் = கடல் நீரை மொண்டு குடித்துக் கருக்கொண்ட
கரு முகில = கரிய மேகம் போல இருண்ட கருமை மிக்க
ஒளி திகழும் = ஒளி விளக்கத்துடன் மணம் வீசுகின்ற (ஓதி) கூந்தல்
நரை பஞ்சு = நரைத்து பஞ்சு போல வெளுத்ததாய்
உதிரம் ஒழு = ரத்தம் நிறைந்து பரிசுத்தமான வேல் போன்ற விழிகளில்
மிடை கடை = நெருங்கி ஒதுங்கும் பீளைகளும்
முடைதயிர் = துர்நாற்றம் கொண்ட தயிர்த்துளிகள் சிதறினவோ என்று சொல்லும்படி கொடிய நாற்றத்துடன் கூடியதாகி

மத கரட தந்த = மதம் பாயும் சுவடு கொண்ட யானையின் வாயிற்
சொருகு = சொருகியுள்ள பிறைச் சந்திரனைப் போன்ற தந்தங்கள் என்னும்படி வெளிப்பட்டு
சூதுகளின் = சூதாடு கருவிகளின் வடிவு கொண்டனவாய்,
கும்ப மோதி = குடத்தை தகர்த்து வளர்கின்ற தனங்கள், தோல் போலாகி,

வனம் அழியும் = அழகு குலைந்து போகின்ற இளம் பெண்களின்
நிலை தனை = (உண்மை) நிலையை உணர்ந்து, (உனது) திருவடியையே சிந்தனை செய்யும், வழியடிமையாகிய நான், அன்பு மிக்கு வளரும் அந்த வழியையே எண்ண மாட்டேனோ.

இதழ் பொதி = இதழின் கட்டு விரிந்த தாமரை மலரில
மணம் அறை = வாசனையுடைய வீடாக புகுந்து வீற்றிருக்கும் பிரமனும்
எறிதிரை = வீசுகின்ற அலை மோதுகின்ற பாற்கடலில், நஞ்சு உடைய பாம்பின் மேல
இரு விழி = இரு கண்களும் துயில் கொள்ளும் திருமாலும்
உமை மருவு = உமையம்மை சேர்ந்துள்ள நிலவு அணியும் சிவனும்
இமையவர் = தேவர்கள் வணங்கும் இந்திரனும் நின்று வணங்குகின்ற

முதல்வ, சுக மைந்த, பீடிகையில்
அகில சக அண்ட நாயகியின்
முகிழ் முலை சுரந்த பால் அமுதம் — உண்டவேனே
முளை முருகு சங்கு வீசி, அலை
முடுகி மை தவழ்ந்த வாய் பெருகி
முதல் இவரு செந்தில் வாழ்வு தரு — தம்பிரானே (மு)

(20) வசனி / பந்துவராளி (8) — ரூ3/4 ஆதி

ஏவினை நேர்விழி மாதரை மேவிய
ஏதனை மூடனை — நெறிபேணா
ஈனனை வீணனை ஏடு எழுதா முழு
ஏழையை மோழையை — அகலா, நீள்
மா வினை மூடிய நோய் பிணியாளனை
வாய்மை இலாதனை — இகழாதே
மாமணி நூபுர சீதள தாள் தனி
வாழ்வுற ஈவதும் — ஒரு நாளே

முதல்வ, சுக மைந்த = முதல்வனே! சுகத்தைத் தரும் குமார மூர்த்தியே
பீடிகையில் . . = சிறந்த பீடத்தில் விளங்கும், எல்லா உலகங்கட்கும் அண்டங்களுக்கும் நாயகியாகிய உமா தேவியாருடைய
முகிழ் முலை . . = அரும்பு போன்ற முலை சுரந்த பாலமுதத்தை உண்டவனே
முளை முருகு - - = வெளித்தோன்றி முதிர்ந்துள்ள சங்குகளை வீசி
அலை முடுகி . . = அலைகள் விரைந்து நெருங்கி, மேகம் தவழ்ந்தது போலப் பெருகி
முதல் இவரு - - = கூடிப்பட்டு உயர்ந்து (கரை) ஏறும் திருச்செந்தூரில் (வீற்றிருந்து) (அடியார்களுக்கு) வாழ்வைத் தருகின்ற தம்பிரானே.

(20) ஏவினை - - - = அம்பை நிகர்த்த கண்களையுடைய பெண்களை விரும்பிய
ஏதனை - - - = குற்றமுடையவனை, மூடனை, நல்ல வழியை விரும்பாத
ஈனனை, வீணனை = குறைபாடு உடையவனை, வீண் பொழுது போக்குபவனை
ஏடு எழுதா முழு ஏழையை = ஏடு எடுத்து எழுதாத முழு முட்டாளை
மோழையை - - = மடையனை விட்டு நீங்காத, நீண்டுள்ள
மா வினை - - = பெரு வினை மூடிய நோய்களால் கட்டுண்டவனை
வாய்மை - - = உண்மை இல்லாதவனை, இகழ்ந்து (ஒதுக்காமல்)
மாமணி நூபுர . . = சிறந்த மணிகளாலாய சிலம்பணிந்துள்ள
சீதள தாள் = குளிர்ந்த (உன்) திருவடிகளை,
தனி வாழ்வுற - = ஒப்பற்ற வாழ்வைப் பெறுமாறு (முத்தி இன்பத்தை)
ஈவதும் ஒரு நாளே = தந்து உதவும் ஒரு நாளும் உண்டோ.

நாவலர் பாடிய நூல் இசையால் வரு
நாரதனார் புகல் குறமானத
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயில் உடையோனே
தேவி மனோமணி ஆயி பராபரை
தேன் மொழியாள் தரு சிறியோனே

சேண் உயர் சோலையி(ல்) நிழலிலே திகழ்
சீரலை வாய் வரு பெருமானே.

நாவலர்.. = புலவர்கள் பாடிய நூல்களை இசையால் பரப்பி வருகின்ற
நாரதனார் = நாரத முனிவர் புகன்ற குறமகளாகிய வள்ளிபிராட்டியை
நாடியெ.. = நாடிச் சென்று, கானகத்தில் மருவிய
சேவக நாயக = வீரனே! தலைவனே
மாமயில்... = சிறந்த மயிலை வாகனமாக உடையவனே.
தேவி.. = ஒளி மயமானவரும், மனத்திற்கு இசைந்த மணியும்
ஆயி பராபரை = அகில உலகங்கட்கும் அன்னையும், பெரிய பொருளும்
தேன்... = தேன் போன்ற இனிய மொழியை உடையவரும் ஆகிய
பார்வதி தந்தருளிய சிறியவனே!
சேண் உயர்.. = விண்ணளவும் உயர்கின்ற சோலைகளின் நிழலிலே
விளங்கும் (சிறந்த கடற்கரைத் தலமாம்) திருச்
செந்தூரில் எழுந்தருளியுள்ள பெருமானே.

---

(21) பிலஹரி (-) ஆதி. 2 களை

ஓரா(து) நன்றைப் பாராது அந்தத்
தோடே வந்திட்டு உயிர் சோர
ஊடா நன்(று) அற்றோர் போல் நின்று/எட்
டா மால் தந்திட்டு உழல் மாதர்;
கூடா அன்பிற் சேரா நின்று, அக்(கு)
ஓயா நின்று, உட் குலையாதே.

(21) ஓராது நன்றை = (உண்மை நெறியாகிய) நன்றை ஆராய்ந்தறியாமலும்
பாராது = அதனை உன்னிப்பார்க்காமலும்
அந்தத்... டு = அழகுடனே வந்து
உயிர் சோர = (கூடவர்களின்) உயிர் சோர்ந்து போகுமாறு
ஊடா... நின்று = பிணங்கி, நல்லதே கிடைக்காதவர்கள் போல நின்று
எட்டா... = அளவு கடந்த ஆசை மயக்கத்தைத் தந்து திரியும் மாதர்களின்
கூடா.. நின்று = விருப்பமில்லாத (வெளி) அன்பிற் சேர்வுற்று நின்று
அக்கு... நின்று = எலும்புடன் கூடிய இச்சரீரம் ஓய்ந்து நின்று
உட் குலையாதே = உள்ளம் குலைந்து போகாதபடி

வெட்ட விட வெட்டக் கிடந்சங் கிடங்சுமென
மக்கள் நெருமிக்கத் தொடர்ந்தும் புரண்டும், வழி
விட்டு வரும் வித்தைத் தவிர்ந்து) உன் பதங்கள் உற
உணர்வேனோ

பட்டு உருவி நெட்டைக் க்ரவுஞ்சமும் பிளந்து, கடல்
முற்றும் அலை வற்றிக் குழம்பும் குழம்ப, முனை
பட்ட அயில் தொட்டுத், திடம் கொண்(டு) எதிர்ந்(த) அவுணர்
முடிசாயத்

தட்டழிய வெட்டிக் கவந்தம் பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளம் கண்(டு) உமிழ்ந்து மணி
சற்சமய வித்தைப் பலன் கண்டு செந்திலுறை
பெருமானே

--- --- ---

பெரு மா னே   செந்திலுறை   பெருமா
னே ....   செந்திலுறை   பெருமா
னே - -   செந்திலுறை   பெருமா   னே

(23) காவடிச்சிந்து   (5½)   (—) 1+1½+1½+1½

கண்டு மொழி, கொம்பு கொங்கை, வஞ்சி இடை, அம்பு நஞ்சு
கண்கள், குழல் கொண்டல் என்று   பலகாலும்
கண்(டு) உளம் வருந்தி நொந்து மங்கையர் வசம் புரிந்து
கங்குல் பகல் என்று நின்று   விதியாலே

வெட்ட விட வெட்டக் கிடந்சங் கிடங்சுமென்ற ஒலியை எழுப்ப
உறவினர்கள் ஒன்று கூடித் தொடர்ந்தும், புரண்டும் வழி விடுகின்ற
வித்தை) பொய் வாழ்வை விட்டு உன் திருவடிகளை அடையும்
வழியை உணர மாட்டேனோ?

பட்டு.. = பட்டு உருவும்படி நிமிர்ந்திருந்த க்ரவுஞ்சமலை பிளக்குமாறு
கடல்.. = கடல் முழுமையும் அலைகள் வற்றி குழம்பாகிக் குழம்புமாறும்
முனை பட்ட.. = கூர்மையான வேலை (தொட்டு) செலுத்தி
திடம்... = பலமாக எதிர்த்து வந்த அசுரர்களின் முடி சாயும்படியாக
தட்டழிய.. = தடையின்றி வெட்டி, தலையில்லாத உடல்களும்,
பெரிய கழுகுகளும் நடனமிடவும்
ரத்தக்.. = ரத்தக் குளம் பெருக வைத்தும்
உமிழ்ந்து மணி = (அவுணர் கிரீடங்களினின்றும்) மணிகள் சிதறி விழ
வைத்தும்
சற்சமய.. = (தேவர் முனிவர்களுக்கு) நல்ல காலம் வருவதற்கு
வேண்டிய விதையைப் பலன் காட்டும்படி வைத்து
செந்தி.. = திருச்செந்தூரில் வீற்றிருக்கும் பெருமானே.

(23) கற்கண்டு சொல், யானையின் தந்தம் கொங்கை, வஞ்சிக்கொடி இடை,
அம்பும், நஞ்சும் கண்கள், கூந்தல் மேகம் என இவ்வாறு
பல முறையும்
(உவமை) கண்டு, உள்ளம் வருந்தி, நொந்து, மாதர்களின்
வசப்பட்டு, இரவும் பகலுமாகக் கழித்து, விதியின் பயனாய்

கோ(டு) ஆர் செம்பொற் தோளா, நின் சொற்
கோடா(து) எனக்கு — அருள் தாராய்

தோரா, வென்றிப் போரா, மன்றற்
தோளா, குன்றைத் — தொளையாடி

சூதா(ய்) எண் திக்கு ஏயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் — பொரும் வேலா

சீர் ஆர் கொன்றைத் தார் மார்(பு) ஒன்றச்
சே ஏறு எந்தைக்கு — இனியோனே

தேனே அன்பர்க்கு என்றும் இன்சொல்
சேயே, செந்திற் — பெருமானே

கோடார் . . . = மலை போன்ற சிவந்த பொன்மயமான தோள்களையுடையவனே
நின் சொல் = நினது திருப்புகழ்
கோடாது . . = ஒரு பொழுதும் தாழாது நின்று அருளும் என்று கூறும்படி
அருள் தாராய் = அருள் பாலிப்பாயாக.
தோரா . . . = தோல்வியே அறியாத வெற்றிப் போர் செய்பவனே
மன்றற் தோளா = மணம் வீசும் தோளனே
குன்றைத் . . = கிரவுஞ்ச மலையை தொளை செய்தவனே
சூதாய் . . . ஏயா = சூதாக எட்டுத் திக்கிலும் சென்று பொருந்தி
வஞ்சச் . . = வஞ்சம் (செய்த) சூரனாகிய மா மரத்தை
அஞ்சும்படி பொருத வேலனே.
சீர் ஆர் கொன்றை = சிறந்த ஆத்தி மலரையும் கொன்றை மலரையும்
தார் மார்பு ஒன்ற = மாலையாக திருமார்பில் திகழ
சே ஏறு . . . = விடையின் மீது ஏறி வருகின்ற எமது பிதாவாகிய
சிவபெருமானுக்கு இனியவனே
தேனே = தேன் போல் இனிப்பவனே! அன்பர்கட்கு என்றே
இனிய சொற்களைப் பேசும் செம்மைப் பண்புடையவரே
செந்திற் . . = திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள பெருமானே.

---

(22) மனேவயம் (மத்யமஸ்ருதி) (35) (√) 4|4|4 O கண்ட நடை (தகதகிட)

கட்டழகு விட்டுத் தளர்ந்(து) அங்(கு) இருந்து, முனம்
இட்ட பொறி தப்பிப் பிணம் கொண்டதின், சிலர்கள்
கட்டணம் எடுத்துச் சுமந்தும், பெரும் பறைகள்
முறையோடே

(22) கட்டழகு . . = இறுகிக் கட்டுக் கோப்பாய் இருந்த அழகு நீங்கித் தளர்ந்து
முனம் இட்ட . . = முன்பு உதவி புரிந்து வந்த ஐம்பொறிகளும் கலங்கிச் சிதறிப் போய். பிணம் என்னும் நிலையை அடைந்தவுடனே, சிலர் சேர்ந்து
கட்டணம் . . = தமக்குரிய கூலியைப் பெற்றுக் கொண்டும் சுமந்து போக
பெரிய பறைகள் முறைப்படி

பண்டை வினை கொண்(டு) உழன்று, வெந்து விழுகின்றல் கண்டு
பங்கய பதங்கள் தந்து புகழ் ஓதும்
பண்புடைய சிந்தை அன்பர் தங்களினுடன் கலந்து
பண்பு பெற அஞ்சல் அஞ்சல் என வாராய்

வண்டு படுகின்ற தொங்கல் கொண்(டு), அற நெருங்கி, இண்டு
வம்பினை அடைந்து சந்தின் மிகமூழ்கி
வஞ்சியை முனிந்த கொங்கை மென் குற மடந்தை செங்கை
வந்(து) அழகுடன் கலந்த மணிமார்பா

திண் திறல் புனைந்த அண்டர் தங்கள், அபயங்கள் கண்டு
செஞ்சமர் புனைந்து துங்க மயில் மீதே
சென்று அசுரர் அஞ்ச வென்று குன்றிடை மணம் புணர்ந்து
செந்தில் நகர் வந்தமர்ந்த பெருமாளே

பழவினை தாக்கத் திரிந்து, (நான்) மனம் வெந்து விழுவதைக் கண்டு, (உனது) தாமரையன்ன திருவடிகளைத் தந்து (உனது) புகழை ஓதுகின்ற பண்பு கொண்ட மனத்தினராம் அன்பர்களுடன் கலந்து, நான் நல்ல குணம் அடைய வேண்டி, அஞ்சல் அஞ்சல் எனக் கூறி வந்தருளுவாயாக.

வண்டுகள் ஒலிக்கின்ற மாலையைப் பூண்டு, மிக நெருங்கிய, (அழுந்தமான) கச்சு (ரவிக்கையைப்) பூண்டதாய், (சந்தின்) சந்தனக் குழம்பில் மிகமூழ்கி வஞ்சிக் கொடி போலும் இடையை வருத்துகின்ற கொங்கைகளை உடைய மென்மை தங்கிய வள்ளியம்மையாருடைய செம்மையான திருக் கரங்களால், அழகுடன் தழுவப்பெற்ற, இரத்தின மணிகள் பொருந்திய திருமார்பையுடையவரே

மிகுந்த வலிமையுடைய தேவர்களது, அபயம் என்ற சொல்லைக் கேட்டு செவ்வையான போர்க்கோலம் பூண்டு தூய மயிலின் மீதே சென்று, அசுரர்களை அஞ்சும்படி வென்று, திருப்பரங்குன்றில் மணம் செய்து, திருச்செந்தூரில் வந்து அமர்ந்த பெருமாளே

---

(24) ஆனந்த பைரவி (7½) (—) (1½+2+4)
(மத்யம ஸ்ருதி)

கமல மாதுடன், இந்திரையும், சரி
சொல ஒணாத, மடந்தையர், சந்தன
களப சீதள கொங்கையில் அம் கையில் இரு போதுஎய்

(24) கமல மாது - - = (தாமரைப் பிராட்டி) கலைமகளும், இலக்குமியும்
சரி சொல - - = (இவர்களுக்கு) ஒப்பு என்று சொல்லுதற் கொணாத பேரழகுடைய மாதர்களின
சந்தன களப - - = சந்தனமும், கலவைச் சாந்தும் அணிந்த குளிர்ந்த தனங்களின் மீதும், அழகிய கரங்களிலும்
இரு போது எய் = இரவு பகலாகிய இரு வேளைகளிலும் பொருந்தியிருந்து

கனவு நூல் தெரி வஞ்சனை, அஞ்சன
விழியில், மோகித கந்த சுகந்தரு
கரிய ஓதியில், இந்து முகந்தனில் மருளாதே

அமலமாகிய சிந்தை அடைந்(து) அகல்
தொலைவிலாத, அறம் பொருள் இன்பமும்
அடைய ஓதி உணர்ந்து தணந்த பின் அருள் தானே

அறியுமாறு பெறும்படி, அன்பினின்
இனிய நாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்;

குமரி காளி பயங்கரி சங்கரி
கவுரி நீலி பரம்பரை அம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி எமதாயி

கனவு ... = மதன நூல்களைத் தெரிவதும், வஞ்சனை செய்வதுமாகிய
அஞ்சன விழி.. = மை தீட்டின கண்களிலும்
மோகித .... தரு = மோகத்தை உண்டு பண்ணுவதும், வாசனையுடையதும்
சுகத்தைத் தருவதுமாகிய கறுத்த கூந்தலிலும்
இந்து ... = நிலவு போன்ற முகத்திலும் மயக்கம் கொள்ளாமல்.
அமலமாகிய .. = மாசில்லாத தூய சிந்தையை அடைந்து
அகல் .. = விசாலமானதும் அழிவு இல்லாததுமான
அறம் .. = அறம், பொருள், இன்ப நூல்கள்
அடைய ... = முழுமையும் ஓதி, உணர்ந்து, ஆசைகளின் கட்டு நீங்கியபின்
அருள் = திருவருளின் (உண்) எளிமையை
தானே அறியுமாறு = தானாகவே அறியும் வழியை (அடியேன்) அடையுமாறு
அன்பினின் ... = அன்புடனே, இனிய ஒலியைத் தரும் சிலம்பு ஒலிக்கின்ற
அருண ஆடக .. = சிவந்த பொன்னாலாகிய, சதங்கைகள் அணிந்துள்ள
அடி தாராய் = திருவடியைத் தந்தருளுக.

என்றும் அகலாத இளம் பருவத்தையுடைய கன்னிப் பெண், கரிய நிறத்தை உடையவள், (அடியவர்) பயத்தை நீக்குபவள், ஆன்மாக்களுக்கு சுகத்தைச் செய்பவள், (கவுரி) பொன்னிறத்தை உடையவள், நீல நிறத்தை உடையவள், (பரம்பரை) பெரிய பொருள்களுக்கெல்லாம் பெரிய பொருளாக வீற்றிருப்பவள், (அம்பிகை) உலக மாதா, (குடிலை) சுத்த மாயை, யோகினி யென்னும் தெய்வமாக இருப்பவள் (சண்டினி) பாவிகளுக்குக் கொடியவளாகத் திகழ்பவள், குண்டலி சக்தியாய் இருப்பவள், எங்கள் தாய்

ஆலகாலம் பரன் பாலது ஆக அஞ்சிடுந்
தேவர் வாழ அன்று (உ)கந்து அமுது ஈயும்
ஆரவாரம் செயும் வேலை மேல் கண் வளர்ந்த
ஆதி மாயன் றனன் மருகோனே
சாலி சேர் சங்கினம், வாவி சூழ் பங்கயச்
சாரல் ஆர் செந்திலம் பதி வாழ்வே
தாவு சூர் அஞ்சி முன் சாய வேகம் பெறும்
தாரை வேல் உந்திடும் பெருமானே

ஆலகால விடமானது, பரம் பொருளான சிவபெருமானிடம் போய்ச்
சேர்ந்த பின், பயந்தோடிய தேவர்கள் வாழும்படி, அன்று மகிழ்ச்
சியுடன் அமுதத்தை தந்தவரும்
பேரொலி செய்யும் கடல் மீது துயில் கொள்ளும் ஆதி மாயனும்
திருமாலின் மருகோனே
நெல் வயல்களில் சேர்ந்துள்ள சங்கினங்களும், தடாகங்களில்
சூழ்ந்து நிறைந்துள்ள தாமரைகளும், (சாரல் ஆர்) அருகே
அமைந்துள்ள அருமையான திருச்செந்திற் பதியில் வாழ்பவனே
தாவி (எதிர்த்து வந்த) சூரன் அஞ்சி முன் சாய்ந்து அழிய, வேகம்
பொருந்திய, (தாரை) கூர்மையான வேலாயுதத்தைச் செலுத்திய
பெருமானே.

(26) குந்தல வராளி (14½) (✓) $\left(\frac{2+1\frac{1}{2}+2+1\frac{1}{2}}{2+1\frac{1}{2}+2+2}\right)$

குடர் நிணம் என்பு சல(ம்) மலம், மண்டு
குருதி நரம்பு சீ உடன் பொதி தோல்
குலவு குரம்பை முருகு சுமந்து
குழைகி மகிழ்ந்து நாயேன் தளரா

அடர் மதன் அம்பை அனைய கருங்கண்
அரிவையர் தங்கள் தோள் தோய்ந்து அயரா
அறிவு அழிகின்ற குணம் அற, உன்றன்
அடியிணை தந்து நீ ஆண்டு அருள்வாய்

(26)

குடல், கொழுப்பு, எலும்பு, சலம், மலம், நிரம்பியுள்ள உதிரம்
நரம்பு, சீழ், மாமிசம், மூடியுள்ள தோல்

(கிளையுடன்) விளங்குகின்ற, (குரம்பை) கூடாகிய, (முருடு) மரக்கட்
டையைத் தூக்கிச் சுமந்து, கொஞ்சிப் பேசியும் மகிழ்ந்தும்,
நாயேன் தளர்ந்தும்
நெருங்கி வரும், மன்மதனது அம்பு போன்ற கரிய கண்களையுடைய
பெண்களின் தோள்களில் தோய்ந்தும், சோர்ந்தும்
அறிவு அழிந்து போகின்ற (தீய) குணம் அற்றுப் போக, உனது
இரண்டு திருவடிகளைக் கொடுத்து, நீர் ஆட்கொண்டு அருள்
புரிவீராக.

குறைவு இலாள், உமை. மந்தரி. அந்தரி
வெகு வித ஆகம சுந்தரி தந்தருள்
குமர! மூஷிகம் உந்திய, ஐங்கர, கணராயன்

மம விநாயகன், நஞ்சு உமிழ் கஞ்சுகி
அணி கஜ ஆனன விம்பன், ஒர் அம்புலி
மவுலியான் உறு சிந்தை உகந்து அருள் இளையோனே

வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும்
இடை விடாது நெருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமானே

குறைவில்லாதவள், உமை, (மந்தரி) சுவர்க்க லோகத்தை அருளுபவள் (அந்தரி) முடிவில்லாதவள், பலவகைப்பட்ட சிவாகமங்களால் துதிக்கப்படும் அழகியுமாகிய பார்வதி தேவி தந்தருளிய குமரனே!

மூஷிகம் . . = பெருச்சாளியின் மீது எழுந்தருளியவரும்
ஐங்கர . . = ஐந்து கரங்களையுடைய, கணங்களுக்கெல்லாம் தலைவரும்
மம விநாயக. . . = எமது விநாயகக் கடவுளும், விஷத்தை கக்கும் சர்ப்பத்தை
அணி = (ஆபரணமாக அரையில்) அணிந்துள்ள யானைமுக வடிவனும்
விம்பன் = ஒளியையுடையனும்
ஓர் அம்புலி மவுலியான் = ஒப்பற்ற பிறையை முடியில் அணிந்துள்ளவனுமான சம்பு
உறு சிந்தை . . = மிகவும் சிந்தை மகிழ்ந்து அருளும் இளையோனே.

வளர்கின்ற வாழையும் மஞ்சளும் இஞ்சியும் எப்போதும் நெருங்கி (விளங்கும்) மங்கலமும் மகிமையும் கொண்டுள்ள சிறந்த நகரமாம் திருச்செந்தூரில் வந்து உறைகின்ற பெருமானே.

---

(25) காலனார் வெங்கொடும் (10) (ஃ) 4-தண்டநடை

காலனார் வெங்கொடும் தூதர், பாசம் கொடு, என்
காவின் ஆர் தந்து உடன் கொடு போகக்

காதலார் மைந்தரும் தாயராரும், சுடும்
கானமே பின் தொடர்ந்(து) அலறு முன்

சூலம் வாள் தண்டு செஞ்சேவல் கோதண்டமும்
சூடு தோளும் தடம் திருமார்பும்

தூய தாள் தண்டையும் காண, ஆர்வம் செயும்
தோகை மேல் கொண்டு முன் வரவேணும்

இயமனது, வெப்பமும் கொடுமையுமுடைய தூதர்கள், பாசக்கயிற்றைக் கொண்டு, எனது (காவின்) பிராணவாயுவுடன் சேர்த்து, (ஆர்தந்து) கட்டி தம்முடன் (என்னுடைய உயிரைக்) கொண்டு போக

அன்பு மிக்க பிள்ளைகளும், தாய்மார்களும், சுடுகாட்டுக்குப் பின் தொடர்ந்து, அலறி அழுது வருவதற்கு முன்பாக

சூலம், வாள், தண்டாயுதம், செவ்விய சேவல், கோதண்டம் (வில்) இவைகளை, (சூடு) அணிந்துள்ள தோள்களையும், அகன்ற அழகிய மார்பையும் தூய்மையுள்ள தாளில் அணிந்துள்ள தண்டையையும் (நான்) காணும்படி அன்பு கொண்டுள்ள மயிலின் மீது ஏறி என் முன்னே வந்து திருவருள் புரிய வேண்டும்.

தடவியல் செந்தில் இறையவ, நண்பு
தரு குற மங்கை வாழ்வாம் புயனே
சரவண கந்த முருக கடம்ப
தனி மயில் கொண்டு பார் சூழ்ந்தவனே
சுடர் படர் குன்று தொளைபட, அண்டர்
தொழ, ஒரு செங்கை வேல் வாங்கியவர
துரித பதங்க இரத, ப்ரசண்ட
சொரி கடல் நின்ற சூர அந்தகனே.

விசாலமான பெருமையுடைய திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனே! அன்புடைய குறமங்கை வள்ளிக்கு, வாழ்வாக விளங்கும் திருப்புயங்களை உடையவனே!

சரவணா! கந்தா! முருகா! கடப்பமாலை தரித்தவனே! ஒப்பற்ற மயில் மீதேறி உலகை வலம் வந்தவனே!

ஒளி பரந்த கிரவுஞ்ச மலை தொளை படவும், தேவர்கள் தொழவும் ஒப்பற்ற சிவந்த திருக்கரத்தினின்றும் வேலாயுதத்தை விடுத்தவனே

வேகத்தோடு செல்லும் பறவையாம் மயிலை ரதமாகக் கொண்ட பெரிய வீரனே! அலை வீசுகின்ற கடலில் நின்ற சூரனுக்கு காலனாயிருந்தவனே

(27) கரஹரப்ரியா (6) ௳¾ 0/4

கொம்பு அனையார் காது மோது(ம்) இரு
கண்களில், அமோத, சீதள
குங்கும பாடீர பூஷண நகம் மேவு
கொங்கையில் நீரவி மேல் வளர்
செங்கழுநீர் மாலை சூடிய
கொண்டையில் ஆதார சோபையில் மருளாதே
உம்பர்கள் ஸ்வாமி நமோ நம
எம்பெருமானே நமோ நம
ஒண் தொடி மோகா நமோ நம என நாளும்

(27) கொம்பனை.. = (பூங்) கொம்பு போன்ற மாதரது காதளவும் நீண்டு அதை
மோதும் ... = மோதும் இரு கண்களிலும்
அமோத, சீதள. = மகிழ்ச்சி தரக்கூடியதும், குளிர்ந்த
குங்கும, பாடீர.. = செஞ்சாந்து, சந்தனம், (பூஷண) ஆபரணங்களை அணிந்துள்ளதும் (நகம்) மலை போன்றதுமாகிய
கொங்கை... = தனங்களிலும், நீர்த் தடாகத்தின் மேலே வளர்ந்துள்ள
செங்கழு... = செங்கழுநீர்ப்பூ மாலையை சூடிய கூந்தலிலும்
ஆதார ... = உடலின் அழகிலும், மன மயக்கம் கொள்ளாமல்

தேவர்களுக்குத் தலைவரே (உன்னை) வணங்குகின்றேன், வணங்குகின்றேன்
எமக்கு நாயகரே உன்னை வணங்குகின்றேன், வணங்குகின்றேன்
(ஒண்) ஒளி பொருந்திய, (தொடி) கை. தோள் வளையல்களையணிந்துள்ள வள்ளியின் மேல், (மோகா) மோகம் கொண்டவனே நமோ நம என்று நாள் தோறும்

உன் புகழே பாடி நான் இனி
அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட, வீண் நாள் படாது அருள் — புரிவாயே

பம்பரமே போல ஆடிய
சங்கரி, வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி — கரசூலி
பங்கம் இலா நீலி, மோடி, பயம் ஹாரி
மாகாளி யோகினி
பண்டு சுராபான சூரனொடு — எதிர் போர் கண்டு
எம் புதல்வா வாழி வாழி
எனும்படி வீறு:ள வேல்தர
என்றும் உளானே மனோகர — வயலூரா
இன்சொல் விசாகா க்ருபாகர
செந்திலில் வாழ்வாகியே, அடி
யேன் தனை ஈடேற வாழ்வருள் — பெருமாளே

உன் புகழையே பாடி நான் இனி அன்புடனே ஆசாரமான பூஜையைச் செய்து பிழைத்திடவும், என் வாழ்நாள் வீணான நாளாகப் போகாதபடியும் அருள் புரிவாயாக.

பம்பரத்தைப் போல் சுழன்று ஆடிய சங்கரி, வேதாளங்களுக்குத் தலைவி, தாமரை போன்ற திருநிறைந்த பாதங்களிற் சிலம்பு அணிந்தவள், திருக்கரத்திற் சூலத்தை ஏந்தினவள், குற்றமில்லாத நீல நிறத்தவள், (மோடி) காடுகாள்-துர்க்கை, பயத்தை போக்குபவள், மகா காளி, யோகினி, முன்பு மதுபானம் செய்திருந்த சூரனொடு எதிர்த்து(நீ) போர் செய்ய வேண்டியதைக் குறித்து

எமது குமரனே வாழ்க வாழ்க என்று வாழ்த்தும்படி, வெற்றியைத் தரும் வேலாயுதத்தைத் தரப்பெற்ற, என்றும் அழியாதுள்ள மூர்த்தியே! மனத்துக்கு இன்பம் தருபவரே! வயலூர்ப் பெருமானே! இனிய சொற்களைப் பேசும் விசாகனே! கருணைக்கு உறைவிடமானவரே! திருச்செந்தூரில் எழுந்தருளி, அடியேன் உய்யுமாறு (நல்) வாழ்வையருளிய பெருமாளே!

(28) <u>குருட்டி</u> (3½) <u>மிஸ்ரசாபு ⊖ 1½+2</u>

சேமக் கோமள பாதத் தாமரை
சேர்தற்(கு) ஓதும் — அநந்த வேத
அதீதத்தே, அவிரோதத்தே, குண
சீலத்தே மிக — அன்புறுதே

(28) இன்பம் தருவதும், அழகுள்ளதுமான (உனது) திருவடித் தாமரையை சேர்வதற்கு உரிய நெறியைச் சொல்லுகின்ற, எண்ணில்லாத வேதங்களை

கடந்த நிலையின் மீதும், பகை என்பதே அறியாத (உயர்ந்த) நிலையின் மீதும், நற்குண நல்லொழுக்கத்திலும், மிகுந்த அன்பைக் கொள்ளாமல்

(சீலம் – தருமம், சத்தியம், ஒழுக்கம், பலம், லக்ஷ்மி)

காமக்ரோத உலோபப் பூத
விகாரத்தே அழிகின்ற மாயா
காயத்தே பசு பாசத்தே சிலர்
காமுற்று உழும் அது என்கொலோதான்

நேமிச் சூரொடு மேருத் தூளெழ
நீளக் காள புயங்க கால
நீலக்ரீப கலாபத் தேர்விடு
நீபச் சேவக செந்தில் வாழ்வே

ஓமத் தீ வழுவார்கட்கு ஊர், சிவ
லோகத்தே தரு(ம்) மங்கை பாலா
யோகத்து ஆறு உபதேசத் தேசிக
ஊமைத் தேவர்கள் தம்பிரானே

காமத்தாலும், குரோதத்தாலும் (க்ரோத வெறுப்பு,பகை,கோபம்), உலோப குணத்தாலும், ஐம்பூதங்களின் கலகத்தாலும், அழிந்து படுகின்ற மாயமான

(இந்த) உடலின் மீதும், சீவாத்மாவாகிய உயிர் இச்சைப்படும் உலகப்பற்றுகளின் மீதும், சிலர் ஆசை வைத்துள்ள நிலை ஏன் தானோ? தெரியவில்லையே!

கடலும், சூரனும், மேருவும் தூளாகும்படி,

நெடிய விஷமுள்ள பாம்பைக் காலிற் கொண்ட

நீலக் கழுத்தையும், தோகையையும் கொண்ட தேராகிய (வாகனமாகிய) மயிலைச் செலுத்திய, (நீப) கடப்ப மலரையணிந்த வீரனே!

திருச்செந்தூரில் வாழ்பவனே!

வேள்வித்தீயை தவறாமல் வளர்ப்பவர்க்கு, உறைவிடத்தை, சிவலோகத்திலே தருகின்ற தேவி (பார்வதியின்) குமரனே

யோக (ஆறு) வழிகளை உபதேசித்த குருமூர்த்தியே!

(சகலகலா வல்லவனாகிய உன்முன்னே) ஊமை போல் வாயில்லாதவர்களாகிய தேவர்கட்குத் தலைவரே.

---

(29) பீம்பளாஸ் (12) (+) சதி-திஸ்ர நடை

தண்தேன் உண்டே வண்டு ஆர்வம் சேர்
தண்தார் மஞ்சுக் குழல் மாதர்
தம்பால், அன்புஆர் நெஞ்சே கொண்டே
சம்பாவம் சொற்(று) அடி நாயேன்

(29) குளிர்ந்த தேனைப் பருகி, வண்டுகள் ஆசையுடன் மொய்க்கும் குளிர்ந்த பூமாலை சூடிய, (மஞ்சு) மேகம் போன்ற கூந்தலை உடைய மாதர்கள்

இடத்தில், அன்பு நிறைந்த மனத்தைக் கொண்டு

நிகழ்ச்சிகளையெல்லாம் பேசுகின்ற, அடிமை நாயேனாகிய (நான்)

மண், தோயம், தீ, மென்கால், விண், தோய்
வண் காயம் பொய்க் குடில் — வேறாய்

வண் கானம் போய் அண்டா முன்பே
வந்தே நின் பொற் — கழல் தாராய்;
கொண்டாடும் பேர், கொண்டாடும் சூர்
கொன்றாய், வென்றிக் — குமரேசா
கொங்கு ஆர் வண்டு ஆர், பண் பாடும், சீர்
குன்று, மன்றல் — கிரியோனே

கண்டு ஆரும் பால் உண்டாய்; அண்டார்
கண்டா, கந்தப் — புய வேளே.

கந்து ஆம் மைந்து ஆர் அம் தோள் மைந்தா
கந்தா செந்திற் — பெருமானே

மண், நீர், தீ, மெல்லிய காற்று, விண் (ஆகிய பஞ்ச பூதங்கள்) தோய்ந்துள்ள, வளம் கொண்ட உடம்பாகிய, பொய்யாகிய சரீரத்தினின்றும் (உயிர்) நீங்கி

கொடுங்கானம் (சுடுகாட்டுக்குப்) போய் நெருங்கும் முன்பே,
நீ வந்து உன் அழகிய திருவடியைத் தந்தருளுக.
தன்னைப் புகழ்ந்து கொண்டாடுபவர்களை, மகிழ்ந்து கொண்டாடுகின்ற
சூரனைக் கொன்றவனே! வெற்றிக் குமரேசனே
பூந்தாதுக்களில் நிறைந்துள்ள வண்டுகள், அரிய பண்ணைப் பாடும், (சீர்க்குன்று) சிறப்பு குறையாத, திருமணம் செய்து கொண்ட மலையாம் வள்ளிமலையில் வாழ்பவரே!
கற்கண்டு போன்ற (உமை திருமுலைப்) பாலை உண்டவனே! (அண்டார் கண்டா) பகைவரைக் கண்டித்தவனே! (கந்த) மணம் தங்கிய புயங்களை உடையவனே
(கந்து ஆம்) கம்பத்துக்கு நிகரான, (மைந்து ஆர்) வலிமை பொருந்திய (அம்) அழகிய தோள்களையுடைய வீரனே! கந்த சுவாமியே! திருச்செந்தூர்ப் பெருமானே!

---

(30) ஸிம்மேந்திர மத்யமம் (2½) (ம) (1+½)
தந்யாசி

தண்டை அணி வெண்டையம் கிண்கிணி சதங்கையும்
தண் கழல் சிலம்புடன் — கொஞ்சவே / நின்

(30) தண்டை, அழகிய வெண்டையம், கிண்கிணி, சதங்கை, அருட் கழல் சிலம்பு (இவையெல்லாம் ஒன்று பட்டு) இனிது ஒலிக்க, உன்,
தண்டை: வீரர்கள் திருவடியில் அணியும் ஆபரணம்
வெண்டையம்: இதுவும் திருவடியில் அணியும் ஆபரணம்
கிண்கிணி: இடையில் கட்டும் திருவாபரணம்
சதங்கை: திருவடியிலும் இடையிலும் அணிவது
கழல்: வீரர்கள் பாதத்தில் அணிவது
சிலம்பு: திருவடியில் அணிவது. முருகனின் சிலம்பு 'பரவிந்து' எனப்படும்

(நின்) தந்தையினை முன் பரிந்(து) இன் பழுசி கொண்டு, நன்
சந்தொட மணைந்து நின்(ற) அன்பு போல

கண்டுற கடம்புடன் சந்த மகுடங்களும்
கஞ்ச மலர் செங்கையும் சிந்து வேலும்

கண்களு முகங்களும் சந்திர நிறங்களும்
கண் குளிர என்றன் முன் சந்தியாவோ

புண்டரிகர் அண்டமும் கொண்ட பகிரண்டமும்
பொங்கி எழ வெங்களம் கொண்ட போது

பொன்கிரி என அம் சிறந்து, எங்கினும் வளர்ந்து, முன்
புண்டரிகர் தந்தையும் சிந்தை கூர

கொண்ட நடனம் பதம், செந்திலிலும் என்றன் முன்
கொஞ்சி நடனம் கொளும் கந்தவேளே

கொங்கை குற மங்கையின் சந்தமணம் உண்டிடும்
கும்பமுநி கும்பிடும் தம்பிரானே

(உன்) தந்தையை (சிவபிரானை) முன்னர் அன்புடன் வலம் வந்து நல்ல சந்தோஷத்தோடு அணைந்து நின்ற (அந்த) அன்பு போலவே,
(நான்) கண்டு மகிழ்ச்சியடையுமாறு, கடப்ப மலர்மாலையும், அழகிய மணிமுடிகளும், தாமரை மலர் போன்ற செங்கைகளும், கொடியும் வேலும் (பன்னிரு) கண்களும், (ஆறு) திரு முகங்களும், சந்திரனையொத்த ஒளிகளும், (என்) கண்கள் குளிருமாறு என் முன் தோன்றி அருள் புரியாவோ?

பிரமனுடைய உலகும், (அப்பிரம்மாண்டத்தைத் தன்னகத்தே அடக்கி) கொண்டுள்ள வெளியண்டங்களும், (மகிழ்ச்சி) பொங்கி எழ, (நீ) கொடிய போர்க்களத்தில் எழுந்தருளிய போது
பொன்மலை போல் மிகவும் அழகிற் சிறந்து, (அதிலாண்டங்களும் திரு மேனியில் அடங்குமாறு) விசுவரூபமெடுத்துக் கொண்டு,
முன்பு (விசுவரூபமெடுத்த) பிரமன் தந்தையாகிய திருமாலும் மன மகிழ்ச்சி மிகக் கொள்ள,
நீ நடித்தருளிய திருவடிகளினுல், திருச்செந்தூரிலும், என் முன்பே கொஞ்சிப் பேசி நடனம் செய்து அருள்புரிந்த கந்தவேளே!
ஞானமாகிய தனங்களையுடைய, வள்ளிபிராட்டியின் திருமேனியில் திகழும் சந்தன வாசனையை நுகர்ந்து சுகிக்கும் தம்பிரானே!
குடமுநி (அகத்தியர்) வணங்கும் தம்பிரானே

(31) அரஹி (8) (ஏ) ஆதி

தந்த பசிதனை அறிந்து முலை அமுது
தந்து முதுகு தடவிய தாயார்
தம்பி பணிவிடை செய் தொண்டர், பிரியமுள
தங்கை, மருகர், உயிர் எனவே சார்
மைந்தர் மனைவியர், கடும்பு, கடன் உதவும்
அந்த வரிசை மொழி பகர், கேடா

வந்து தலை நவிர் அவிழ்ந்து, தரை புக, ம
யங்க ஒரு மகிட மிசை ஏறி
அந்தகனும் எனை அடர்ந்து வருகையில்
அஞ்சல் என, வலிய மயில் மேல் நீ
அந்த நறவியொடு உகந்த மனிதன் நமது
அன்பன் என மொழிய வருவாயே
சிந்தை மகிழ மலை மங்கை நகில் இணைகள்
சிந்து பயம் அயிலும் அயில் வீரா
திங்கள் அரவு நதி துன்று சடிலர் அருள்
செந்தில் நகரில் உறை பெருமானே.

(31) (வருத்தத்தைத்) தந்த பசியைக் குறிப்பாலுணர்ந்து, முலைப்பால்
தந்து முதுகைத் தடவிய தாயார்

தம்பி, ஏவல் செய்யும் வேலைக்காரர்கள், பிரியம் உள தங்கை,
மருகர், உயிரே போல் மிகவும் அன்புடன் சார்ந்திருந்த
பிள்ளைகள், மனைவியர், (கடும்பு) உறவினர் (ஆகிய இவர்கள் யாவரும்
தம் தம்) கடன் - கடமைக்கு உரிய அந்த உபசார வார்த்தைகளைக்
கூறுவதெல்லாம், (கேடா) அழியும்படியாக
வந்து, தலைமயிர் அவிழ்ந்து, தரையில் வீழ்ந்து புரள, மயங்கும்
வண்ணம், ஒரு எருமைக் கடாவின் மேல் ஏறி
யமன் என்னை நெருங்கி வரும் போது, அஞ்சாதே என்று கூறி, வலிய
மயில் மேல் நீ,
அந்த யமனிடம், (இவன் நமக்கு) வேண்டியவன், நம்முடைய
அன்பன் என்று சொல்ல வந்தருளுவாயாக
சிந்தை மகிழும்படி, மலைமங்கை பார்வதியின் கொங்கைகள்
இரண்டும் தந்த (பயம்) பாலை உண்ட வேல் வீரனே
நிலவும், பாம்பும், கங்கை நதியும், நெருங்கிப் பொதிந்துள்ள சடா
பாரத்தையுடைய சிவபெருமான் அருளிய திருச்செந்தூர் நகரில்
வீற்றிருக்கும் பெருமானே

---

(32) அபோதி (14) (ஃ) 1/4 மிஸ்ர நடை

தரிக்கும் கலை நெகிழ்க்கும், பர
தவிக்கும் கொடி மதன் ஏவில்

(32) அணிந்துள்ள ஆடை நெகிழ்ந்து போம், வேதனைப்படும்
கொடி போன்ற (இப்பெண்) மன்மதனது பாணத்தினால் (ஏ-அம்பு)

தகைக்கும். தனி திகைக்கும். சிறு
தமிழ்த் தென்றலின் உடனே நின்று
எரிக்கும் பிறை எனப், புண்படும்
எனப் புன்கவி சில பாடி

இருக்கும் சிலர் திருச்செந்திலை
உரைத்(து) உய்ந்திட அறியாரே
அரிக்கும் சதுர்மறைக்கும் பிர
மனுக்கும் தெரி அரிதான
அடிச் செஞ்சடை முடிக் கொண்டிடும்
அரற்கும், புரி தவபார
திரிக் கும்ப, நன் முனிக்கும், கருணை
வரிக்கும், குருபர வாழ்வே
திளைக்கும் திறல் அரக்கன் கிளை
கெடக் கன்றிய பெருமானே.
திருச்செந்திலை உரைத்(து) உய்ந்திட அருள்வாயே

தடையுண்ணும், தனியாக நின்று திகைக்கும், மெல்லிய
இனிய தென்றல் காற்றுடனே வந்து நின்று
இந்தச் சந்திரன் கொளுத்துகின்றது என்று கூறி, மனம் புண்
ணுகின்றது என்றும் கூறி, மனிதர்கள் மீது கீழான பாடல்கள்
சிலவற்றைப் பாடி
இருக்கின்ற சிலர், திருச்செந்தூரை பாடிக் கடைத்தேற
அறிய மாட்டாரோ? [அறியாதிருக்கின்றாரே - இதென்ன பாவம்]
திருமாலுக்கும், நான்மறைக்கும், பிரமனுக்கும்
தெரிந்து கொள்வதற்கு அரியதான
திருவடியையும், செஞ்சடை முடியையும் கொண்டுள்ள
சிவபிரானுக்கும், செய்துள்ள தவம் நிறைந்த
(பொதிய) மலையில் வாசம் செய்யும், கும்பத்தில் தோன்றிய நல்ல
அகத்திய முநிவருக்கும், அருள் பாலித்த குருபர மூர்த்தியே!
பெருகி வந்த வீரமுள்ள அசுரன் (சூரன்), அவன் சுற்றத்தாருடன்
அழியக் (கன்றிய) கோபித்த பெருமானே

---

(33) பைரவி (7) (ப) 1300

துன்பம் கொண்(டு) அங்கம் மெலிந்து அற
நொந்(து) அன்பும் பண்பும் மறந்(து) ஒளி
துஞ்சும் பெண் சஞ்சலம் என்பதில் அணுகாதே

(33)

துன்பத்தையடைந்து, உடம்பு மெலிவுற்று, மிகவும் நொந்து,
அன்பையும் பண்பையும் மறந்து, உடம்பின் ஒளி குறைந்து
போகுமாறு செய்கின்ற. பெண் மயக்கம் என்பதில், நான்
அணுகிச் சிக்கிக் கொள்ளாமல்

இன்பம் தந்(து) உம்பர் தொழும் பத
கஞ்சம் தம் தஞ்சம் எனும்படி
என்றென்றும் தொண்டு செயும்படி — அருள்வாயே (மு)

நின் பங்(கு) ஒன்றும் குறமின் சர
ணங் கண்டு அஞ்சம் எனும்படி
நின்(று) அன்பின் தன்படி கும்பிடும் — இளையோனே

பைம்பொன் சிந்தின் துறை தங்கிய
குன்றெங்கும் சங்கு வலம்புரி
பம்பும் தென் செந்திலின் வந்தருள் — பெருமாளே (மு)

இன்பத்தைத் தந்தருளி, தேவர்கள் பணிகின்ற, பாத தாமரையே
நமது தஞ்சமென்று (புகலிடமென்று) கொண்டு, என்றென்றும் (உனக்கு)
தொண்டு செய்யுமாறு அருள்புரிவாயாக

உன் பக்கத்தில் பொருந்தி நிற்கும், குறக்குலத்து மின் போன்ற வள்ளி
பிராட்டியின் திருவடியைக் கண்டு, (இதுவே எனக்கும்) புகலிடம் என்று
விளங்கும்படி நின்று, அன்பின் முறைப்படி கும்பிட்ட இளையோனே!

பசுமைப் பொலிவுடன் விளங்கும் கடற்கரையில் உள்ள. குன்றுக
ளிலெல்லாம், வலம்புரி சங்குகள் நிறைந்துள்ள, அழகிய
திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள பெருமாளே.

---

(34) தோடி/அடாணா (7½) (ம) (1½+1½+2+1½+1)

தொந்தி சரிய, மயிரே வெளிற, நிரை
தந்தம் அசைய, முதுகே வளைய, இதழ்
தொங்க, ஒருகை தடிமேல் வர, மகளிர் — நகையாடி
தொண்டு கிழவன் இவன் ஆரென, இருமல்
கிண்கிண்ன.., முன் உரையே குழற, விழி
துஞ்சு குருடு படவே, செவிடு படு — செவியாகி

வந்த பிணியும், அதிலே மிடையும், ஒரு
பண்டிதனும், மெய் உறு வேதனையும். இள
மைந்தர் உடைமை கடன் ஏது என முடுகு — துயர் மேவி

(34) வயிறு சரியவும். மயிர் வெளுத்துப் போகவும், (நிரை) வரிசையாக
இருந்த பற்கள் அசையவும், முதுகு வளையவும், உதடுகள் தொங்
கவும், (கூனுடன்) ஒரு கை தடிமேல் வரவும், பெண்கள் பரிகாசச்
சிரிப்பு சிரித்து,

தொண்டு கிழவன் இவன் ஆர் என்று பரிகசிக்கவும், இருமல்
கிண் கிண் என ஒலிக்கவும், முன்னர் திருத்தமாகப் பேசிக் கொண்
டிருந்த சொற்கள் குழறவும், கண் (ஒளி) சோர்வு பட்டுக் குருட்டுத்
தன்மை அடையவும், செவிட்டுத் தன்மையை செவிகள் அடையவும்

வந்த பிணிகளும். அது சம்பந்தமாக அடிக்கடி வரும் வைத்தியனும்,
உடல் படுகின்ற வேதனையும் (ஒரு புறம் இருக்க - மற்றொரு புறத்தே) - சிறு
பிள்ளைகள் (அப்பா) ஆஸ்தி எவ்வளவு? கடன் எவ்வளவு என்று
விடாது கேட்கத் - துயரங் கொண்டு

மங்கை அழுது விழவே, யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுக, உயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின் மிசை — வரவேணும் (மு)
எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனி வருக
என் கண் வருக எனது ஆருயிர் வருக — அபிராம
இங்கு வருக, அரசே வருக, முலை
உண்க வருக. மலர் சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகல — வருமாயன்
சிந்தை மகிழு மருகா, குறவர் இள
வஞ்சி மருவும் அழகா, அமரர் சிறை
சிந்த, அசுரர் கிளை வேரொடு மடிய — அடு தீரா
திங்கள் அரவு நதி சூடிய பரமர்
தந்த குமரா, அலையே கரை பொருத
செந்தில் நகரில் இனிதே மருவி வளர் — பெருமாளே (ப)

மனைவி அழுது விழவும், யம தூதர்கள் வந்து நெருங்கி நிற்கவும், மலம் ஒழுகவும், உயிர் ஒடுங்கிப் போம் பொழுது, (முருகா) நீ விரைவில் மயில் மேல் வந்து அருள் புரிய வேணும்

என் அப்பனே வா! ரகுநாயகனே வா! குழந்தாய் வா! மகனே தாமதியாது இனி வருவாய்! என் கண்ணே வா! என் ஆருயிரே வா!
அழகில் சிறந்தவனே
இங்கே வா! அரசே வா! பால் குடிக்க வா! பூமுடித்துக் கொள்ள வா! என்றெல்லாம் அன்புடனே கௌசலை கூற வந்த மாயன் (திருமால்)

சிந்தை மகிழும் மருகனே! குறவர் குலத்து இளங் கொடியாம் வள்ளி அணையும் அழகனே! தேவர் சிறை ஒழிய, அசுரர் கூட்டங்கள் வேரொடு மடிய அழித்த வீரனே!

நிலவையும், பாம்பையும், நதியையும் சூடியுள்ள சிவபிரான் தந்த குமரனே! (கடல்) அலை கரையில் மோதுகின்ற திருச்செந்தூர் நகரில் இன்புற்று வீற்றிருக்கும் பெருமானே

---

(35) ஜோன்புரி (8) ௨$\frac{3}{4}$ ஆதி

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக வலை நிரம்பிச்
சூழ் பொருள் தேட ஓடி வருந்திப் — புதிதான
தூதொடு நான்மணி மாலை, ப்ரபந்தக்
கோவை உலா மடல் கூறி அருந்தித்
தோம் உறு காளையர் வாசல் தொறும் புக்கு — அலமாரும்

(35) தோல் கொண்டு மூடப்பட்ட இவ்வுடலை நம்பி. மாதர்களுடைய (தோதக) வஞ்சக வலை நிரம்புவதால், நிலையின்றி சுற்றுகின்ற செல்வத்தை ஈட்டும் பொருட்டு, பல திசைகளிலும் ஓடி, வருத்தமுற்று
புது விதமான
தூது, நான்மணிமாலை, ப்ரபந்தங்கள், கோவை, உலா, மடல் முதலிய (நூல் வகைகளைப்) பாடி, (அருந்தி) அவைகளிலேயே ஈடுபட்டு [தோம் உறு] குற்றம் உள்ள மக்களுடைய வாசல் தொறும் (புகுந்து வருந்துகின்ற) அலைந்து திரியும்

காலனை, வீணனை, நீதி கெடும் பொய்க்
கோளனை, மானம் இலா(வழி) நெஞ்சக
காதக, லோப, வ்ருதாவனை நிந்தைப் புலையேனை

காரண காரிய லோக ப்ரபஞ்சச்
சோகம் எலாம் அற, வாழ்வுற நம்பிற்
காசு அற வாரி மெய்ஞ் ஞான தவம் சற்று அருளாதோ (மு)

பால் அன மீது மன் நான்முக செம்பொற்
பாவனை மோது அபராதன, பண்டு அப்
பாரிய மாருதி தோள் மிசை கொண்டு உற்று அமராடி

பாவி இராவணனார் தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள் புணர் மாதுலர் சிந்தைக்கு இனியோனே

சீலம் உலாவிய நாரதர் வந்துற்று
ஈது அவள் வாழ் புனமாம் என முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரி தோய்வாய்

சேலொடு வாளை வரால்கள் கிளம்பித்
தாறு கொள் பூகம் அளாவிய இன்பச்
சீரலை வாய் நகர் மேவிய கந்தப் பெருமாளே (மு)

கால்களை உடையவனை, வீணே பொழுது போக்குபவனை, நீதி தவறிய பொய்யைக் கொண்டவனை, மானம் இல்லாத வழியிற் செல்லும் நெஞ்சம் கொண்டவனை, (காதக) கொலைத்தன்மையும், உலோபத்தன்மையும். உடைய விருதாவாகக்காலம் கழிப்பவனை, நிந்திக்கப்படும் கீழ்மகனை
காரண காரியங்களால் வரும் இந்த உலக (ப்ரபஞ்ச) வாழ்க்கையில் துன்பங்கள் எல்லாம் நீங்கவும், நல்வாழ்வு சேரவும், (நம்பில்) விருப்பத்துடனே, (காசு அற) குற்றமற்ற (வாரி) செல்வமான உண்மை ஞானத்தோடு கூடிய தவநிலையைச் சற்று அருளலாகாதோ?
பால் நிறமுள்ள அன்னத்தின் மீது நிலைபெற்றவனும், நான்கு முகங்களையும், செம்பொன் நிறத்தையும் கொண்ட (படைத்தல் தொழிலை பாலனம் - பாதுகாப்பவனும் பிரமதேவனை (கரங்களால்) மோதி, தண்டனை விதித்தவனே; முன்பு, அந்தப் பெரிய அநுமாரின் தோள் மேல் வீற்றிருந்து போர் செய்து
பாவியாம் ராவணனுடைய தலைகள் சிதறவும், உத்தமராம் விபீஷணர் வாழ்வுறவும் (வைத்து), மணந்த பாவையாம் சீதாபிராட்டியாரின் தோளைச் சேர்ந்த மாமனும் திருமாலின் சிந்தைக்கு இனியவனே!
நல்லொழுக்கத்திற் சிறந்த நாரதர் (உன்னிடம்) வந்து, இது (அவள்) வள்ளியம்மையார் வாழ்கின்ற தினைப்புனமாம் என்று குறிப்பிட்டுச் சொல்ல, முன்னரில், தேன் போன்ற இனிய மொழியை உடைய, சந்தனக்கலவை அணிந்த இளமையுடையவருமாகிய, இன்ப மலை போன்ற வள்ளியைப் பொருந்தியவரே
சேல், வாளை, வரால் மீன்கள் கிளம்பித் துள்ளிப் பாய்ந்து, குலை விட்டுள்ள கமுக (பாக்கு) மரத்தில் விளையாடும், இன்பகரமான திருச்செந்தூர் நகரில் வீற்றிருக்கும் கந்தப் பெருமானே.

(36) கேதார கௌளை (12) (✓) ஆதி-திஸ்ர நடை

நாலும் ஐந்து வாசல் கீறு தூறு (உ)டம்பு கால் கையாகி
நாடி என்பில் ஆகும் ஆகம் அதனூடே

நாதம் ஒன்ற ஆதி வாயில் நாடகங்களான ஆடி
நாடு அறிந்திடாமல் ஏக வனராமுன்

நூல் அநந்த கோடி தேடி மால் மிகுந்து பாருளோரை
நூறு செஞ்சொல் கூறி மாறி விளை தீமை

நோய் கலந்த வாழ்வு (உ)றாமல், நீ கலந்து உள் ஆகு, ஞான
நூல் அடங்க ஓத வாழ்வு தருவாயே

காலன் வந்து பாலன் ஆவி காய என்று பாசம் வீசு
காலம் வந்து, ஓலம் ஓலம் எனும் ஆதி

காமன் ஐந்து பாணமோடு வேமின் என்று காணும் மோனர்,
காள கண்டரோடு வேதம் மொழிவோனே

ஆலம் ஒன்று வேலை ஆகி, ஆனை அஞ்சல் தீரும் மூல
ஆழி அங்கை ஆயன் மாயன் மருகோனே

அரணங்கள் தானை நாட வாரணம் கை மேவும்
ஆதியான செந்தில், வாழ்வதான பெருமானே.

(4+5) ஒன்பது வாயில்கள் வகுக்கப்பட்ட, அவதாறுக்கு இடமான இந்த உடம்பு, கால்களும் கரங்களும் கொண்டு, நரம்பு எலும்பு இவைகளால் ஆகிய (ஆகம்) உடம்பின் உள்ளே

இந்திரியம் பொருந்த, (தொழில்களுக்கு) மூலமாகிய, (வாயில்-பொறி) ஐம்பொறிகளினல், பல வித கூத்துக்களை ஆடி, ஊராரும் அறிந்திடாதபடி (ஏக) போவதற்கென்றே-(மாய்வதற்கென்றே) வளர்வதற்கு முன்னே

நூல்கள் பல கோடி தேடிப் படித்து, (பொருள்) ஆசை மிக்கு, உலகில் உள்ள செல்வரை, நூற்றுக் கணக்கான செஞ்சொற்களால் புகழ்ந்து (மாறி) புத்தி தடுமாறி, அதனால் விளைந்த தீமைகளும்

நோயும் கலந்த வாழ்வை (இனி நான்) அடையாமல், நீ என் உள்ளத்தில் கலந்து, என்னுள்ளேயே வீற்றிருக்கும்படிச் செய்ய வல்ல, ஞான நூல்கள் முழுவதையும் ஓதும்படியான வாழ்வைத் தந்தருளுவாயாக-

காலன் வந்து பாலனும் மார்க்கண்டேயருடைய உயிரை வருத்த வேண்டும் என்று, பாசக் கயிற்றை வீசின சமயத்தில் வெளி வந்து அபயம் (தந்தோம்) அபயம் (தந்தோம்) என்ற ஆதி முதல்வரும்

மன்மதன் தனது ஐந்து பாணங்களோடு, வெந்து போம்படி, (நெற்றிக் கண்ணால்) கண்ட மௌனமூர்த்தியும், கறுத்த கழுத்தை உடையவரும் ஆகிய சிவபிராற்கு வேதப் பொருளை உரைத்தவனே

ஆலகால விஷம் தோன்றிய கடலிலே பள்ளி கொண்டவராகி, கஜேந்திரனுடைய அச்சத்தைத் தீர்த்த மூல மூர்த்தி, சக்கரம் ஏந்திய அழகிய திருக்கையை உடையவர், இடையர் குலத்து வந்தவர் ஆகிய மாயனும் திருமாலின் மருகனே.

வேதங்கள் திருவடியைத் துதிக்க. கோழிக்கொடியைத் திருக்கரத்தில் கொண்ட முதல்வரான பெருமானே! திருச்செந்தூரில் வாழ்ந்தருளும் பெருமானே!

(37) தந்யாஸி (4½) (+) 2+½+1

நிதிக்குப் பிங்கலன் பதத்துக்(கு) இந்திரன்
நிறத்திற் கந்தன் என்று இனைவோரை
நிலத்திற் றன் பெரும் பசிக்குத் தஞ்சமென்(று)
அரற்றித் துன்ப நெஞ் சினில் நாளும்
புதுச்சொல் சங்கம் ஒன்(று) இசைத்துச் சங்கடம்
புகட்டிக் கொண்(டு) உடம்(பு) அழி மாயும்
புலத்தில் சஞ்சலம் குலைத்திட்(டு) உன் பதம்
புணர்க்கைக்கு அன்பு தந்து அருள்வாயே
மதித்துத் திண்புரம் சிரித்துக் கொன்றிடும்
மறத்தில் தந்தை, மன்றினில் ஆடி
மழுக்கைக் கொண்ட சங்கரர்க்குச் சென்று வண்
வண் தமிழ்ச் சொல் சந்தம் ஒன்று அருள்வோனே
குதித்துக் குன்று இடந்து அலைத்து செம்பொனுங்
கொழித்துக் கொண்ட செந்தியின் வாழ்வே
குறப்பொற் கொம்பை முன் புனத்திற் செங்கரம்
குவித்துக் கும்பிடும் பெருமானே.

(37) செல்வத்துக்குக் குபேரன், பதவிக்கு இந்திரன், புகழொளிக்குக் கந்தன் என்றெல்லாம் நான்கூறி, (கொடுப்பதற்கு) வருந்துவோரிடம் (போய்) [இனைவோர் : வருந்துவோர்]
இப்பூமியில் எம் பெரும் பசிக்குப் புகல் அளிப்பவர் நீரே என்று முறையிட்டு துன்பமே (குடி கொண்ட) நெஞ்சில் நாள் தோறும்
புதிதாகச் சொற் கூட்டத்தால் (பாடல்) ஒன்றை அமைத்துச் சொல்லும் சங்கடத்தில் நானே மாட்டிக்கொண்டு, உடம்பை அழித்து மாய்க்கின்ற
புலன்களால் வரும் சஞ்சலங்களை அழித்துத் தொலைத்து, உன் திருவடியைச் சேர்வதற்கு வேண்டிய அன்பைத் தந்து அருள் புரிவாயாக.
மனத்தில் எண்ணி, வலிய முப்புரங்களை, புன்சிரிப்பால் அழித்த வீரமுள்ள தந்தையும், அம்பலத்தில் நடனம் புரிபவரும்
மழுவைக் கையிற் கொண்டவருமான சிவபெருமானுக்கு, (தலம்தோறும்) சென்று, வனப்பும் பொருந்திய தமிழ்ச் சொற் சந்தம் ஒன்றை (சந்தம் நிறைந்த தேவாரப் பாடலை) சமர்ப்பித்தவனே!
(அலைகள்) குதித்தெழுந்து குன்றுகளைத் தோண்டி அலைத்துச் செம்பொன்னையும் கொழித்துத் தள்ளும் திருச்செந்தூரில் வாழ்பவனே!
குறக்குலத்து, அழகிய கொடி போன்ற வள்ளியை, முன்பு தினைப் புனத்தில், உன் செங்கரங்களைக் கூப்பிக் கும்பிட்ட பெருமானே.

(38) பாகேஸ்ரீ (3½) (-) 2+½

நிலையாப் பொருளை உடலாக் கருதி
நெடு நாட் பொழுதும் அவமே போய்

(38)

நிலையில்லாத பொருள்களை போன்றதை [உடல் = பொன்] நினைத்து (அதனை ஈட்டும் பொருட்டு) நெடு நாட் பொழுதெல்லாம் வீணாகச் செலவழித்து

பந்த பாசமும் மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகில் உருவொடு
பண்பு இலாது ஒரு பகடது முதுகினில் — யமராஜன்
அஞ்சவே வரும் அவசரமதில், ஒரு
தஞ்சம் ஆகியெ வழி வழி அருள் பெறும்
அன்பினால் உன(து) அடி புகழ் அடிமை என் — எதிரே நீ
அண்ட கோளகை வெடிபட இடிபட
எண் திசா முகம் மட மட நடமிடும்
அந்த மோகர மயிலினில் இயலுடன் — வரவேணும்

மஞ்சு போல் வளர் அளகமும், இனகிய
ரஞ்சிதா (அ)ம்ருத வசனமும், நிலவென
அந்த தூய வெண்முறுவலும், இரு குழை — அளவோடும்
மன்றல் வாரிச நயனமும், அழகிய
குன்ற வாணர் தம் மட மகள் தட முலை
மந்தரா (அ)சல மிசை துயில், அழகிய — மணவாளா
செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ் திசை சகலமும் இகல் செய்து,
திங்கள் வேணியர் பலதனி தொழுது (உ)யர் — மகமேரு

தெண்டு மோதின அரசருள் அதிபதி
தொண்டர் ஆதியும் வழி வழி நெறி பெற
செந்தில் மாநகர் இனிது (உ)றை அமரர்கள் — பெருமானே

கட்டும்படியான பாசக் கயிறும். பொருந்தியுள்ள கைகளும், வலி மிகுந்து நீண்டுள்ளதும், கரிய மேகத்தை யொத்ததுமாகிய உருவத்துடன், குணமில்லாத ஒரு எருமையின் மேல் யம ராஜன் (நான்) அஞ்சும்படியாக வருகின்ற அந்தச் சமயத்தில், நப்பற்ற உனக்கே அடைக்கலமாய் (உன்னையே) புகல் அடைந்து, தலைமுறை தலைமுறையாக உனது திருவருளைப் பெறவே விரும்பும், அன்பு கொண்டு உனது திருவடியைப் புகழும் அடிமையாகிய என் எதிரில் நீ,

அண்ட முகடு வெடி படவும், இடி படவும், எட்டுத் திக்குப் பக்கங்களும் மட மட என்னும்படி நடனம் செய்கின்ற. அந்த உக்கிரமான மயிலின் மீது அன்புடன் (அருட் குணத்துடன்) வரவேணும்

(கரிய) மேகம் போல வளர்ந்துள்ள கூந்தலும், மெல்லிய, இனிமையான அம்ருதம் போன்ற பேச்சும், நிலவு போல விளங்கும் சுத்தமான வெண்ணிறமுள்ள பற்களும், இரண்டு காதளவும் நீண்டுள்ள

நறுமணம் உள்ள தாமரை போன்ற கண்களும், அழகிய (வள்ளிமலை) குன்றில் வாழ்பவர்களான வேடர்களுடைய, மடமைத் தன்மை பொருந்திய மகளாம் வள்ளியின், பருத்த கொங்கைகளாகிய மந்தர மலை மீது தூங்கும் அழகிய மணவாளனே!

செம்மையுடைய தமிழ் மொழியாற் சிறந்து விளங்கும் தென் திசை வடதிசை, மேல் திசை, மேலான கிழக்கு முதலிய திசைகள் எல்லா வற்றிலும் போர் செய்து, நிலவை அணிந்த சடை முடியராம் சிவ பிரானுடைய பல கோயில்களிலும் தொழுது, உயர்ந்த மகாமேரு மலையின் மீது

செண்டை எறிந்த அரச அதிபதியே! தொண்டர் முதலானோர் வழிவழி அடிமையாயிருந்து முத்தி பெற அருளிய திருச்செந்தூர் மாநகரில் இனிது வீற்றிருக்கும் தேவர்கள் பெருமானே.

நிறை போய்ச் செவிடு குருடாய்ப், பிணிகள்
நிறைவாய்ப், பொறிகள் தடுமாறி;
மல நீர்ச் சயன மிசையாய்ப் பெருகி
மடிவேற்(கு) உரிய நெறியாத
மறைபோற்(ற) அரிய ஒளியாய்ப் பரவு
மலர் தாள் கமலம் அருள்வாயே:
கொலை காட்(டு) அவுணர் கெட, மாச் சலதி
குளமாய்ச் சுவற முது சூதம்
குறிபோய்ப் பிளவுபட மேற் கதுவு
கொதி வேற் படையை விடுவோனே
அலை வாய்க் கரையின் மகிழ் சீர்க் குமர
அழியாப் புனித வடிவாகும்
அரனார்க்கு அதித பொருள் காட்(டு) அதிப
அடியார்க்(கு) எளிய பெருமானே.

(மனத்தின்) திண்மை போய்ச் செவிடாகி, குருடாகி, பிணிகள்
நிறைந்து, ஐம்பொறிகளும் தடுமாற்றம் அடைந்து
மலமும் நீரும் படுக்கை மேலேயே பெருகி, இறந்து படுகின்ற
(அடியேனுக்கு) உரிய முத்தி நெறியாக
வேதங்களால் போற்றுதற்கு அரிதான, ஒளியாக விரிந்துள்ள
மலரடித் தாமரையைத் தந்தருளுவாயாக
கொலையே புரிகின்ற அசுரர்கள் அழியவும், பெரிய கடலானது
குளம் போல் வற்றவும், முதிர்ந்த மாமரமானது
குறியின் பட்டுப், பிளவுபட, மேலே பற்றும்படியாக எரி வீசும்
வேலாயுதத்தைச் செலுத்தினவனே!
திருச்செந்தூர்க் கடற்கரையில் மகிழ்கின்ற சிறப்பு வாய்ந்த குமரனே
அழியாத பரிசுத்த வடிவாகும்
சிவபெருமானுக்கு எல்லாம் கடந்த பொருளை விளக்கிக் காட்டி
(உபதேசித்த) தலைவனே! அடியார்க்கு எளிய பெருமானே.

---

(39) ஸிம்மேந்திர மத்யமம் (7½) ௭ 1½+2+4

பஞ்ச பாதகமும் உறு பிறை எயி(று), எரி
குஞ்சி, கூர் விட மதர் விழி, பிலவக
பங்க வாள் முக, முடுகிய நெடிய திரிசூலம்

(39) ஐம்பெரும் பாதகமும் (கொலை, களவு, பொய், கள், குரு நிந்தை)
குடிகொண்ட (மாதிரி பயங்கரமாயுள்ள) பிறைச் சந்திரன் போல
(வெளுப்பும் வளைவும் உள்ள) பற்கள், எரியும் நெருப்புப் போன்ற
(குஞ்சி) தலை மயிர், கொடிய விஷம் ததும்புகின்ற செருக்குள்ள கண்கள்
(பிலவக) குரங்கு போன்ற பயங்கரமான ஒளி வீசும் முகம்,
விரைந்து செல்ல வல்லதும், நீண்டுள்ளதுமான முத்தலைச்
சூலம்

(40) <u>பந்துவராளி</u> (7½) <u>⊃ 1+½+½+½+2</u>

படர் புவியின் மீது மீறி, வஞ்சர்கள்
வியனின் உரை பானுவாய் வியந்து (உ)ரை,
பழுதில் பெறு சில நூல்களும் தெரி — சங்க பாடல்
பனுவல் கதை காவ்யம் ஆம் எண் எண் கலை
திருவளுவதேவர் வாய்மை என்கிற
பழமொழியை ஓதியே உணர்ந்து பல் — சந்தமாலை

மடல் பரணி கோவையார் கலம்பகம்
முதல் உளது கோடி கோண ப்ரபந்தமும்
வகை வகையில் ஆசு சேர் பெருங்கவி — சண்டவாயு
மதுரகவி ராஜன் நானென் வெண்குடை
விருது கொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு (உ)லாவும் மால் <u>அகந்தை</u> — <u>தவிர்ந்திடாதோ</u>(மு)

அடல் பொருது பூசலே விளைந்திட
எதிர் பொர ஒணாமல் ஏக சங்கர
அரஹர சிவா மஹாதேவ என்று (உ)ன்னி — அன்று சேவித்து
அவனி வெகு காலமாய் வணங்கி உள்
உருகி, வெகு பாச, கோச, சம்ப்ரம
அதிபல, கடோர, மா சலந்தரன் — நொந்து வீழ

(40) விசாலமான பூதலத்தின் கண் உயர்ச்சியடைந்து, வஞ்சகர்கள் வியப்பாகக் கூறு முறையில், கல்வியில் சூரியனே என்று வியந்து உரைத்தும், குற்றம் இல்லாத ஒழுக்க நூல்களையும், கிடைத்துள்ள சங்கநூற் பாடல்களையும்,
(வேறு) நூல்களையும், கதைகளையும், காப்பியங்களையும், ஆகிய அறுபத்து நான்கு கலைநூல்களையும், 'திருவள்ளுவ தேவர் வாய்மை' எனப்படும் பழைய மொழி நூலாகிய திருக்குறளையும், ஓதியும், உணர்ந்தும் பல வகையான சந்த மாலைச் செய்யுள்கள்
மடல், பரணி, கோவை, கலம்பகம் முதலான கோடிக் கணக்கைக் கொண்ட ப்ரபந்தவகைகளைப் பாடியும், வகை வகையாக 'ஆசுப் பெருங்கவி' 'சண்டவாயு' (சண்ட மாருதம்)
மதுரகவிராஜன். (நானென்-நானென) நான் என்று ஆடம்பரமாகப் பட்டப்பெயர்களை வைத்துக் கொண்டும்) வெண்குடை, விருது (வெற்றிச் சின்னம்), கொடி, தாளம், மேளம், பல்லக்கு முதலான சிறப்புச் சின்னங்களோடு உலாவி வரும், மயக்க அறிவும், அகங்காரமும் தவிரதோ (அகுரர்கள்). வலிமையுடன் எதிர்த்து போர் புரிந்திட, எதிர் நின்று போர் செய்ய முடியாமல், 'ஏகனே! சங்கர! ஹர ஹர! மஹாதேவா! என்று தியானித்து அன்று சேவித்து
பூமியில் வெகு காலம் (தவஞ் செய்து) வணங்கி, உள்ளம் உருகி, அநேக பாசம் என்ற ஆயுதமும், (கோசம்) கவசமும், சிறப்பும், மிக்க பலமும், கொடுமையும் (மா) பெருமையும் உடைய சலந்தாசுரன் வருந்தி விழ

உடல் தடியும் ஆழி தா என, அம்புய
மலர்கள் தச நூறு தாள் இடும் பகல்
ஒரு மலர் இலாது, கோ அணிந்திடு செங்கண் மாலுக்கு

உதவிய மகேசர் பால, இந்திரன்
மகளை மண மேவி வீறு செந்திலில்
உரிய அடியேனை ஆள வந்தருள் தம்பிரானே.

(அவனது) உடலைத் தறித்த (அந்த) சக்கரத்தைத் தந்தருள் என்று, தாமரை மலர்கள் பத்து நூறு (ஆயிரம்) கொண்டு தாளிற் பூசித்து வந்த நாள்களில் (ஒரு நாள்) ஒரு மலர் இலாது குறைய, (அதற்கு ஈடாகத்) தனது (கோ) கண்ணையே அணிந்திட்ட சிவந்த கண்களையுடைய திருமாலுக்கு (சக்ராயுதத்தைத்) தந்தருளிய மகாதேவருடைய குமாரரே! இந்திரன் மகளைத் திருமணஞ் செய்து கொண்டு, பெருமை மிக்க திருச்செந்தூரில், (உன்னிடம்) உரிமை பூண்ட அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு வந்து அருளிய தம்பிரானே.

(41) தேவகாந்தாரி (12) (-) /4/400

பரிமள களப சுகந்தச் சந்தத் தனமாதர்
படை யமபடை என அந்திக்கும் கட் கடையாலே

வரி அளி நிரை முரல் கொங்குக் கங்குற் குழலாலே

மறுகிடு மருளனை, இன்புற்று அன்புற்று அருள்வாயே

அரி திரு மருக, கடம்பத் தொங்கற் திருமார்பா
அலை குமுகுமு என வெம்பக் கண்டித்து எறிவேலா

திரிபுரதகனரும் வந்திக்கும் சற் குருநாதா
ஜெய ஜெய ஹர ஹர செந்திற் கந்தப் பெருமானே.

(41) மணமுள்ள கலவைச் சாந்தினின்றும், நறுமணம் வீசுகின்ற (சுந்த) அழகிய தனங்களை உடைய மாதர்களின்
படைகளுள் யமனுடைய படை என்று சொல்லும்படியாக (அந்திக்கும்) சந்திக்கும் கடைக்கண்ணாலும்
கோடுள்ள வண்டுகளின் (நிரை முரல்) வரிசை ஒலிக்கின்ற, (கொங்குற்) வாசனையுள்ள, இருண்ட கூந்தலாலும்
மனக் கவலை கொண்டு அறிவு மயங்கும் என்னை, இன்பத்துடனும் அன்புடனும், ஆட்கொண்டு அருளுவாயாக
திருமாலின் திருமருகனே. கடம்ப மாலை அணிந்த அழகிய மார்பனே!
அலைகள் குமு குமு என்று கொதிப்புறுமாறு, கடலைக் கண்டித்து எறிந்த வேலாயுதனே!
முப்புரத்தை எரித்த சிவபெருமானும் வணங்கும் சற்குருநாதனே! வெற்றியையுடையவரே! பாவத்தை நீக்குபவரே! திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமானே!

(43) சங்கராபரணம்ப்ரியா (5) (✓) 2+½+½

பூரண வார கும்ப சீத பபாற கொங்கை
மாதர் விகார வஞ்ச லீலையிலே உழன்று
போது அவமே இழந்து போனது மானம் என்பது அறியாத

பூரியனாகி நெஞ்சு காவல் படாத, பஞ்ச
பாதகனாய், அறம் செயாது, அடியோடு இறந்து
போனவர் வாழ்வு கண்டும் ஆசையிலே அழுந்தும் மயல் தீர

காரண காரியங்கள் ஆனதெலாம் ஒழிந்து,
யானெனும் மேதை விண்டு, பாவகமாய் இருந்து,
கால் உடலூடு இயங்கி, நாசியின் மீது இரண்டு விழிபாயக்

காயமும், நாவும், நெஞ்சும் ஓர் வழியாக, அன்பு
சாயம் விடாமல், உன்றன் நீடிய தாள் நினைந்து,
காணுதல் கூர் தவம் செய் யோகிகளாய் விளங்க அருள்வாயே

ஆரண சார மந்த்ர வேதம் எலாம் விளங்க
ஆதிரையானை நின்று தாழ்வன் என வணங்கும்
ஆதரவால் விளங்கு பூரண ஞான மிஞ்சும் உரவோனே

(43) நிறைந்து கச்சொடு (ரவிக்கையோடு) கூடிய, கும்பம் போன்ற குளிர்ந்த, சந்தனக்கலவை அணிந்த கொங்கைகளை உடைய (பொது) மகளிருடைய அவலக்ஷணமான வஞ்சகம் உள்ள ஆடல்களிலே அலைப்புண்டு, பொழுதை வீணாக இழந்து, போய் விட்டது மானம் என்பதை அறியாத

கீழ் மகனாகி, மனது கட்டுக்கு அடங்காத, ஐம்பெரும் பாதகங்களைச் செய்தவனாய், தருமமே செய்யாமல், இருந்த சுவடேயின்றி அறவே இறந்தவர்கள் மாய வாழ்வைக் கண்டும், ஆசையில் அழுந்துகின்ற (எனது) மயக்கம் தீரும்படி

வினைகளின் காரணமாக இருப்பதும், காரியமாக வருவதுமாகிய அனைத்தும் நீங்கப் பெற்று, நான் (நான்) என வரும் (ஆணவக்) கொழுப்பு நீங்கி, தியானத்துடன் இருந்து, (பிராண) வாயு உடலூடே இயங்கி ஓடி, மூக்கின் மீது இரண்டு விழிகளின் பார்வையைச் செலுத்தி

காயம், வாக்கு, மனம் (மனம், வாக்கு, காயம்) என்னும் மூன்றும் ஒரு வழிப்பட்டு நிற்க, அன்பானது உடலுள்ள அளவும் நீங்காமல், உனது அழிவற்ற திருத்தாள்களை நினைத்து, (அத்திருவடிகளின்) காட்சியைப் பெறுவதற்கு மிக்க தவத்தைச் செய்கின்ற யோகிகளைப் போல், நான் விளங்க அருள் புரிவாயே.

வேதசாரமான மந்திரங்களும், வேதங்கள் எல்லாமும் விளங்கும்படியாகத் (திருநெறித் தமிழ் என்னும் தேவாரப்பாக்களால்) திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு உரித்தானவராகிய சிவபெருமானை, எதிர் நின்று, வணங்குவேன் என்று உலகுக்குக் காட்டி வணங்கும், அன்பினால் மேம்பட்ட பூரணமான ஞானம் மிக்க வல்லவனே (ஞானசம்பந்தப் பெருமானே!)

[ஆதிரையான் ஐ - சிவன் குருகளை வணங்கி பிரணவ உபதேசம் பெற்றதைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்]

(42) ரஞ்சனி (12) ஆதி - திஸ்ர நடை

புகரப் புங்க பகரக் குன்றிற்
புயலிற் தங்கிப் பொலிவோனும்
பொருவிற் தஞ்சச், சுருதிச் சங்கப்
பொருளைப், பண்பிற் புகல்வோனும்
திகிரிச் செங்கட் செவியிற் துச்சு (அ)த்
திகிரிச் செங்கைத் திருமாலும்
திரியப், பொங்கித் திரை அற்று (உ)ண்டு உள்
தெளிதற்கு நன்றைத் தரவேணும்

தகரத்து அந்தச் சிகரத்(து) நன்றித்
தட நவ் கஞ்சத்(து) உறைவோனே.

தருணக் கொங்கைக் குறவிக்கு இன்பத்தை
அளித்து அன்புற்று அருள்வோனே
பகரப் பைம்பொற் சிகரக் குன்றைப்
படியிற் சிந்தத் தொடும் வேலா
பவளத் துங்கப் புரிசைச் செந்திற்
பதியிற் கந்தப் பெருமானே

174

(42) (புகர) புள்ளிகளை உடையதும், (புங்க) உயர்ந்துள்ளதும், (பகர) அழகுள்ளதுமான, மலை போன்ற வெள்ளை யானையின் மீதும், மேகத்தின் மீதும் தங்கி விளங்கும் இந்திரனும்

இணையில்லாத, எல்லாக் கலைகளுக்கும் புகலிடமான, வேதத் தொகுதிகளின் பொருளை முறையுடன் சொல்லும் பிரமனும்

மலை போலப் பெருமை வாய்ந்த (கட்செவி) பாம்பாகிய ஆதிசேஷன் மீது (துச்சு) அறிதுயில் புரிகின்ற, அந்தச் சக்கரம் (ஏந்திய) சிவந்த கரமலருடைய திருமாலும்

(திரிய) நமக்கு இவ்வுபதேசப் பொருள் கிடைக்கவில்லையே என்று மனம் கலங்கிச் [சுழல, (பொங்கி) என் உள்ளம் மகிழ்ந்து (திரை அற்று) எண்ண அலைகள் அகன்று. (உண்டு) நீ சொல்லும் அந்த உபதேச மொழியை (உண்டு) உட்கொண்டு. உள்ளம் தெளிவு பெறுதற்கு, (அந்த ஒப்பற்ற தானை தனிப் பொருளாம் (நன்றை) நருமொழியை உபதேசித்தருள வேண்டும்.

தகர வித்தை என்கின்ற வேதசிரோமுடியாகிய ப்ரம்ம ஞானத்திற் பொருந்தி, நல்ல இடமாகிய இதய கமலத்தில் உறைவோனே. [ஆன்மாக்களின் இதய தாமரைக்கு நடுவே ஞான மயமாக விளங்கும் ஆகாயம் - தகராலயம், தகராகாசம் எனப்படும் - அதன் நடுவே சுத்த பளிங்கு போன்ற பரமான்மா வசிக்கின்றது. இதையறிகின்ற வித்தை தகர வித்தை எனப்படும்]

இளங் கொங்கை கொண்ட குறத்தியாகிய வள்ளியம்மையாருக்கு இன்பத்தை அளித்து, (அவளிடம்) அன்பு உற்று அருள்வோனே!

ஒளி கொண்ட பைம்பொற் சிகரங்களை உடைய கிரவுஞ்ச மலையை, (படி) இப் பூமியிற் சிதறி மடியத் (தொடு) செலுத்திய வேலாயுதனே!

பவளம் போன்ற சிவந்த தூய மதில் சூழ்ந்த திருச்செந்தூர்ப் பதியில் எழுந்தருளிய கந்தப் பெருமானே.

ஆர்கலி யூடெழுந்து மா வடிவாகி நின்ற
சூரனை மாள வென்று, வான் உலகாளும் அண்டர்
ஆனவர், கூர் அரந்தை தீர முனாள் மகிழ்ந்த முருகேசா
வாரணம் மூலம் என்ற போதினில் ஆழி கொண்டு
வாவியின் மாடு கிடங்கர் பாழ் படவே எறிந்த
மாமுகில் திருண்ட மேனியனும் முகுந்தன் மருகோனே
வாலுகமீது வண்டல் மூடிய காலில் வந்து
சூல் நிறைவான சங்கு ; மாமணி ஈன, உந்து
வாரிதி நீர் பரந்த சீரலைவாய் உகந்த பெருமாளே.

(44) ஹம்ஸாநந்தி (12) ஆதி- திஸ்ர நடை

மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற உடல் தீயின்
மண்டி எரிய, விண்டு, புனலில்
வஞ்சம் ஒழிய விழ, ஆவி
வெம் கண் மறலி தன் கை மருவ
வெம்பி கிடறும் ஒரு பாச-
விஞ்சை விளையும் அன்று (உன்) அடிமை
வென்றி அடிகள் தொழ வாராய்
சிங்கம் உழுவை தங்கும் அடவி
சென்று, மறமின் உடன் வாழ்வாய்

கடலூடே எழுந்து மாமர வடிவுடன் நின்ற சூரனை மாளும்படி வென்று, வான் உலகை ஆளும் தேவர்களுக்கு உண்டான, பெருந் துன்பம் ஒழியும்படி, முன்பொரு நாள் (உதவி செய்து) மகிழ்ந்த முருகேசனே!

யானை (கஜேந்திரன்) ஆதிமூலமே என்று அழைத்த போது, சக்ராயுதத்தைக் கொண்டு, (வாவியின் மாடு) மடுவிலிருந்த (கிடங்கர்) முதலையானது அழிந்து போகுமாறு எறிந்த, சிறந்த மேகத்தைப் போல் கரிய திருமேனியை உடையவனும் திருமாலின் மருகோனே!

வெண்மணலின் மீது, வண்டல் மூடிய வாய்க்கால் வழியாக வந்து, நிறைந்த கருப்பமுற்ற சங்கினங்கள், சிறந்த முத்து மணிகளைப் பெறும்படியாக, (உந்து...) செலுத்துகின்ற அலைகளையுடைய கடல் நீர் பரந்துள்ள திருச்சீரலைவாயில் மகிழ்ந்திருக்கும் பெருமானே.

(44) மனைவி, மக்கள், தமது உறவினர், வந்து கதறி அழ, உடலானது நெருப்பில்

சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்க, (விண்டு) (உறவினர்கள் சுடுகாட்டை விட்டு) நீங்கி, நீரில், (வஞ்சம்-மாயம்) பந்தம் என்கின்ற மாயம் ஒழியுமாறு படிந்து குளிக்க, உயிர்

கொடிய கண்களையுடைய யமனது கையிற் சிக்கிக்கொள்ள, மனம் புழுங்கித் துன்பப்படும், ஒரு பாசமாகிய (பற்று எனப்படும்)

மாயக் (கூத்து) நிகழ்கின்ற அந்த நாளில், உனது அடிமையாகிய நான் வெற்றி பொருந்தும் (உன்) திருவடிகளைத் தொழ அருள்வாயாக

சிங்கங்களும், புலிகளும் தங்குகின்ற காட்டுக்குச் சென்று வேடப் பெண்ணாகிய வள்ளியுடன் வாழ்ந்தவனே!

சிந்தை மகிழ அன்பர் புகழ்
செந்தில் உறையும் முருகோனே
எங்கும் இலகு திங்கள் கமலம்
என்று புகலு(ம்) முக மாதர்

இன்பம் வினைய அன்பின் அணையும்
என்றும் இனிய பெருமானே.

உள்ளம் மகிழ்ச்சியுடன் அன்பர்கள் துதி செய்கின்ற திருச்செந்தூரில் உறைகின்ற முருகோனே.

எங்கும் விளங்குகின்ற சந்திரனையும், தாமரையையும் ஒத்தது என்று [உவமை] சொல்லப்படும் முகத்தையுடைய மாதர்கள் - வள்ளியையும், தேவசேனையையும்

இன்பம் பெருக அன்போடு அணைகின்ற, என்றும் இளமையுடன் இருக்கின்ற பெருமானே.

---

(45) தேகபா (3½) ப (1½+2)

மனத்தின் பங்கு எனத் தங்கு ஐம்
புலத்(து) என்றன் குணத்து, அஞ்சு
இந்த்ரியத் தும்பந்தனைச் சிந்தும் படி, காலன்
மலர்ச் செங்கண் கனற் பொங்கு
திறத்தின் தண்டு எடுத்து அண்டம்
கிழித்து இன்று இங்கு உறத், தங்கும் பலபேரும்
எனக்கு என்று இங்கு உனக்கு என்று அங்கு
இனத்தின் கண் கணக்கு என்று என்று
இளைத்து அன்பும் கெடுத்து, அங்கம் கழிவு ஆம் முன்

இசைக்கும் செந்தமிழ் கொண்டு அங்கு
இரக்கும் புன் தொழில் பங்கம்
கெடத் துன்பம் கழித்து இன்பம் தருவாயே

(45) மனமானது செல்வதற்குப் பங்கு (எடுத்துக் கொள்வன) எனத் தங்கியுள்ள ஐம்புலன்களோடு (சம்பந்தப்பட்ட) என்னுடைய குணமும், ஐந்து இந்த்ரியங்களைக் கட்டியுள்ள தூணாகிய இவ்வுடம்பும் சிதறிப் போகுமாறு காலன்,

மலர் போன்ற சிவந்த கண்கள் நெருப்பு மிக்கு எழும், வலிமையுடன் தண்டாயுதத்தை எடுத்து, அண்டம் கிழியும்படி (தோன்றி) இங்கு (என்னிடம்) வர, (என்னுடன்) தங்கும் பல சுற்றத்தினரும்

(இது) எனக்கு என்றும், இங்கு உனக்கு (அது) என்றும், (பாகப் பிரிவினை பற்றி சண்டை எழ) அப்போது சுற்றத்தாரிடம், கணக்கு (கணக்கு) என்று பல முறை கூறி இளைத்து, (உறவினர்களின்) அன்பையும் கெடுத்து, என் உடல் அழிந்து ஒழிக்கப்படுவதற்கு முன்னே

புகழ்நிறைந்த செந்தமிழ் கொண்டு, அங்கு (பொருள் உள்ளவரிடம்) யாசிக்கும் இழிதொழிற் குற்றம் நீங்க, (என்) துன்பத்தை ஒழித்து இன்பத்தைத் தந்து அருள் புரிவாயே.

கனைக்கும் தண் கடற் சங்கம்
கரத்தின் கண் தரித்து எங்கும்
கலக்கம் சிந்திடக் கண் துஞ்சிடு மாலும்
கதித்த ஒண் பங்கயத்தன், பண்பு
அனைத்தும் குன்றிடச், சந்தங்
களிக்கும் சம்புவுக்கும், செம் பொருள் ஈவாய்
தினைக் குன்றம் தனிற் தங்கும்
சிறுப்பெண் குங்குமக் கும்பம்
திருச்செம்பொன் புயத்து என்றும் புனைவோனே
செழிக்கும் குண்டு அகழ், சங்கம்
கொழிக்கும் சந்தனத்தின் பைம்
பொழில் தண் செந்திலிற் தங்கும் பெருமானே.

ஒலிக்கின்ற குளிர்ந்த கடலில், பாஞ்சஜன்யம் என்னும் சங்கைத் திருக்கரத்தில் தரித்து, உலகு எங்கும் ஆன்மாக்களின் இடர்கள் ஒழிய, அறிதுயில் கொள்ளும் திருமாலும்
(அவர் உந்தித் தாமரையில்) தோன்றிய ஒளியுடைய பிரமனும், அவர்களது பெருமை எல்லாம் குலையச் சந்தப் பாடலைக் கேட்டு மகிழும் சிவபெருமானுக்கு, செம்மைப் பொருளை (பிரணவப் பொருளை) உபதேசித்தவனே!
தினைப்பயிர் விளையும் மலையிலே வசிக்கின்ற சிறிய பெண்ணாம் வள்ளியின், குங்குமம் பூசியுள்ள குடம் போன்ற தனங்களை, அழகிய செம்பொன் போன்ற புயங்களில் என்றும் புனைந்தருள்பவனே!
செழித்து ஆழ்ந்துள்ள நீர்நிலை (கடல்), சங்கங்களைக் கொழிக்கின்றதும், சந்தனப் பசுஞ்சோலைகளும் சூழ்ந்த, குளிர்ந்த திருச்செந்தூரில் தங்கும் பெருமானே.

---

(46) செஞ்சுருட்டி ($7\frac{1}{2}$) (✓) ($\frac{1}{2}+1+1\frac{1}{2}+2+1\frac{1}{2}$)

முந்து தமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர் மனை வாசல் தேடித் தேடி உழலாதே
முந்தை வினையே வராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத்தேக
முந்து அடிமையேனை ஆளத் தானும் முனமீதே
திந்தி திமி தோதி தீதித் தீதி
தந்த தன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத்தோடு நடமாடும்

(46) பழமையான தமிழ் மொழிப் பாமாலைகளைக் கோடிக் கணக்காக, சந்தத்தோடு நீளமாகப் பாடிப் பாடி, அழிவுறும் மக்கள் தம் வீட்டு வாசலைத் தேடித் தேடி (நான் பொருள் விருப்பத்தால்) உழன்று அலையா வண்ணம்,
பழவினை என்பதே என்னைத் தொடராது ஓடிப் போகவும், பெண்ணாசை என்பது தூரத்தே (ஓடிப்) போகவும், வழிவழி அடிமைப்பட்ட பழமையான அடிமையான என்னை, ஆட்கொள்வதற்காக, (நீ என்) முன்னிலையில்
'திந்தி திமி தோதி தீதித் தீதி, தந்த தன தான தானத் தான செஞ்செணகு சேகு' என வரும் தாளத்துக்கு ஒக்க நடம் செய்யும்

செம் சிறிய கால், விசாலத் தோகை,
துங்க, அநுகூலப் பார்வை, தீர,
செம்பொன் மயில் மீதிலே எப்போது வருவாயே

அந்தண் மறை வேள்வி காவற்கார,
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்கார,
அண்டர் உபகார, சேவற்கார, முடிமேலே
அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார,
குன்று (உ)ருவ ஏவும் வேலைக்கார,
அந்தம் வெகுவான ரூபக்கார, எழிலான

சிந்துரமின் மேவு போகக்கார
விந்தை குறமாது வேளைக்கார
செஞ்சொல் அடியார்கள் வாரக்கார எதிரான

செஞ்சமரை மாயு மாயக்கார
துங்கரண சூர சூறைக்கார
செந்தினில் வாழும் ஆண்மைக்கார பெருமானே

(47) காபி (7½) 1½+2+4
முனைச் சங்(கு) ஓலிடு நீல மகோததி
அடைத்(து), அஞ்சாத இராவணன் நீள்பல
முடிக்(கு), அன்று ஓர் கணை ஏவும் இராகவன் மருகோனே

செவ்விய சிறிய கால்களையும், விசாலமான தோகையையும், தூயதாய், நன்மை புரிவதாய் உள்ள பார்வையையும், தீரத்தையும் செம்பொன் நிறத்தையும் உடைய மயில் மீது எப்போது வருவாய்!

அழகிய அருள் பாலிக்கும், (மறை வேள்வி) வேத விதிப்படி செய்யும் யாகங்களுக்கு காவல் புரியும் காவல்காரரே! செந்தமிழ்ச் சொற்களால் தொடுக்கப்பட்ட பாமாலைகளை அணிந்து கொள்பவரே! தேவர்களுக்கு உபகாரியே! சேவற்கொடியோனே! முடிமேலே கை கூப்பித் தொழும் அடியார்களிடம் அன்பு பூண்டுள்ளவனே! (கிரௌஞ்ச) மலை ஊடுருவும்படி ஏவின வேலாயுதத்தை உடையவரே! அழகு மிகப் பொலியும் திருவுருவம் கொண்டவனே! அழகுள்ள யானை மாது (தேவயானை) விரும்பும் போகம் வாய்ந்தவனே! அழகிய குறமாது (வள்ளியுடன்) பொழுது போக்கும் மெய்க்காவற்காரனே! செஞ்சொற்களால் போற்றும் அடியார்கள் மீது அன்பு கொண்டவனே! எதிர்த்து வரும் — (வாரம் = அன்பு)

பெரிய போரில் (பகைவரை) மாய்க்கும் மாயக்காரனே! பெரும் போரில் சூரனை சூறையாடினவனே! (சூறைக் காற்றைப் போல் அடித்துத் தள்ளியவனே) திருச்செந்தூர் நகரில் வாழும் ஆண்மை (திடம்) யை உடைய பெருமானே!

(47)

(முனை) மூக்கை உடைய சங்குகள் ஒலிக்கின்ற நீலக் கடலை அடைத்து அச்சுதலில்லாத இராவணனுடைய நீண்ட பல முடிகளும் (விழ) அன்று ஓர் அம்பைச் செலுத்திய ராகவனுடைய மருகனே!

முளைக்கும் சீத நிலாவொடு, அரா, விரி
திரைக் கங்கா நதி தாதகி, கூவிள(ம்)
முடிக்கும் சேகரர் பேர் அருளால் வரு — முருகோனே

தினைச் செங்கானக வேடுவரானவர்
திகைத்து 'அந்தோ' எனவே கணியாகிய
திறற் கந்தா, வள்ளி நாயகி காமுறும் — எழில் வேலா

சிறக்கும் தாமரை ஓடையில் மேடையில்
நிறக்கும் சூல் வளை பால் மணி வீசிய
திருச்செந்தூர் வரு சேவகனே சுரர் — பெருமானே (மு)

வினைச் சண்டாளனை, வீணனை, நீள் நிதி
தனைக் கண்(டு) ஆணவமான நிர்மூடனை
விடக்(கு) அன்பாய் நுகர் பாழனை ஓர் மொழி — பகராதே

விகற்பம் கூறிடு மோக விகாரனை
அறத்தின் பால் ஒழுகாத மூதேவியை
விளித்து உன் பாதுகை நீதர நான் அருள் — பெறுவேனோ (மு)

(48) <u>மாயா மானவ கொளா</u> <u>(16)</u> (ப) <u>அதி-உகளா</u>

மூப்பு (உ)ற்று செவி கேட்ப (அ)ற்றுப் பெரு
மூச்சு (உ)ற்று செயல் — தடுமாறி

முளைக்கும் குளிர்ந்த நிலாவோடு (வளர் பிறைச் சந்திரனோடு), பாம்பு, விரிந்து அலை (மோதும்) கங்கா நதி, (தாதகி) ஆத்திப்பூ, (கூவிளம்) வில்வம் இவைகளைச் சூடும் திருமுடியை உடையவருமாகிய சிவபெருமானின் பேரருளாலே தோன்றிய முருகோனே!

தினைப்புனத்திருந்த செவ்விய காட்டு வேடர்கள் திகைப்புற்று, "ஐயோ! இதென்ன அதிசயம்" என்று கூறும்படியாக (கணி) வேங்கை மரமாய் நின்ற வலிமை பொருந்திய கந்தப் பெருமானே! வள்ளிநாயகியம்மை ஆசைப்படும் அழகு வாய்ந்த வேலனே!

சிறந்த தாமரை ஓடைகளிலும், மேடைகளிலும், நல்ல நிறமுள்ள, சினை கொண்ட (வளை) சங்குகள், பால் போன்ற வெண்ணிறமுடைய (மணி) முத்துக்களை வீசுகின்ற திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள பராக்ரமசாலியே! தேவர்கள் பெருமானே!

தீய காரியங்கள் புரியும் சண்டாளனை, வீண் காரியங்களைப் புரிபவனை, பெரும் பொருளைப் பெற்றதால் ஆணவம் கொண்ட முழுமூடனை, மாமிசத்தை ஆசையொடு உண்ணும் பாழானவனை, (நேர்மையான) ஓர் சொல்லைச் சொல்லாமல்

மாறுபட்ட பேச்சுக்களையே பேசும் மோக விகாரனை, அறநெறியில் ஒழுகாத மூதேவியான என்னை அழைத்து, உனது பாதுகையை நீ தர நான் பெறும்படியான அருளைப் பெறுவேனோ!

(48)

வயது முதிர்ந்து, காது கேட்கும் சக்தியை இழந்து, பெருமூச்சு விட்டுக் கொண்டு, செயல்கள் தடுமாறி

மூர்க்கச் செற்குரல் காட்டிக், கக்கிட
முக்குக்குட் சனி கிளையோடும்
கோப்புக் கட்டி இறை பிச்சு எற்றிடு
கூட்டிற் புக்கு உயிர் அலையாமுன்
கூற்றத் தத்துவம் நீக்கிப், பொற்கழல்
கூட்டிச், சற்று அருள் புரிவாயே

காப்புப் பொற்கிரி கோட்டிப், பற்றலர்
காப்பைக் கட்டவர் குருநாதா

காட்டுக்குள் குறவாட்டிக்குப் பல
காப்புக் குத்திரம் மொழிவோனே
வாய்ப்புற்ற தமிழ் மார்க்க திண் பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே

வார்த்தைச் சிற்பர, தீர்த்தச் சுற்று அலை
வாய்க்குட் பொற்பமர் பெருமானே

(49) தங்கரனந்தப்ரியா (9) (ம) ($\frac{1}{2}$+ 1+$\frac{1}{2}$ + 1+$\frac{1}{2}$ + 1+$\frac{1}{2}$)
மூளும் வினை சேர, மேல் கொண்டிடா, ஐந்து
பூத வெகுவாய மாயங்கள் தாம் நெஞ்சில்
மூடி, நெறி நீதி ஏதும் செயா வஞ்சி அதிபார

கொடிய கோபச் சொற்கள் வரும் குரலைக் காட்டி, வெளிப்படு
கின்ற மூக்குச் சளியும் (நெஞ்சுக்) கோழையும்
கோத்தது போல ஒன்று சேர்ந்து, துன்பம் உண்டாக்கி வருத்தும்
இவ்வுடலிற் புகுந்து (என்) உயிர் அலைவதற்கு முன்னம்
கூற்றுவன் (என் உயிரை விடுவிக்கும்) செயலமைப்பை நீக்கி,
உனது அழகிய திருவடியில் என்னைச் சேர்த்து சற்று அருள் புரிவாயே
[கூற்றத் தத்துவம்: உடல் வேறு உயிர் வேறாகக் கூறுபடுத்தும் யம வேதனைத் தன்மை]
(பூமி நிலைத்து நிற்பதற்கு) காவலாயிருக்கின்ற பொன்மலையை (மேருவை)
(கோட்டி) வளைத்து, பகைவராகிய முப்புரத்தாருடைய, அரணை (காப்பு
மதில்) [சுட்டவர்] களைந்தவர் - அழித்தவராம் சிவனுக்குக் குருநாதனே!
காட்டுக்குள், குறவாட்டியாம் வள்ளியிடம், பலவாறாகக் காத்துப் புரப்பதை
குறிக்கும் (என்னை நீ காத்தருள் என்னும்) மாயச் சொற்களைச் சொன்னவனே!
செழிப்புற்ற தமிழ், (மார்க்கம்) அகப்பொருள் துறையின், [திண்-
திண்ணிய] உறுதியான பொருளின், (வாய்) வாய்மைக்கு [அகப்பொருள்
துறையின் உண்மை விளக்கத்துக்கு, உருத்திர சன்மராய், (சித்திர)
அழகுறத் தெளிவுபடுத்திய முருகோனே!
சொல்லுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டவரே! புனிதமான தீர்த்தத்
துறைகள் சுற்றியுள்ள கடலின் கரையில் (திருச்செந்தூரில் அழகாக
அமர்ந்துள்ள (பொற்பு அமர்) பெருமானே.

(49) மூண்டு வருகின்ற பண்டை வினைகள் (சேர்ந்து) மேல் கொண்டு (என்னைப் பீடிக்க)
ஐந்து பூதங்களாற் பலவகையான மாயங்கள் என் உள்ளத்தில் குவிய (மூடி),
நெறியான செயல், நீதியான செயல் என்பன நான் செய்யாமல், வஞ்சிக்கொடி
போன்ற மாதர்களின் அதிபார (தனங்களின் மீது)

மோக நினைவான போகம் செய்வேன், அண்டர்
தேட அரிது ஆய ஞேயங்களாய் நின்ற
மூல பர யோக மேல் கொண்டிடா நின்று   அது உனது ஆதி

நாளும் அதி வேக கால் கொண்டு தீ மண்ட
வாசி அனலூடு போய் ஒன்றி, வானின் கண்
தாமமதி மீதில் ஊறும் கலா இன்ப   அமுதூறல்

நாடி, அதன் மீது போய் நின்ற ஆநந்த
மேலை வெளி ஏறி நீயின்றி நானின்றி
நாடி, இனும் வேறுதான் இன்றி வாழ்கின்றது   ஒரு நாளே(மு)

கால விடம் உண்ணி, மாதங்கி, வேதஞ் சொல்
பேதை, நெடு நீலி, பாதங்களால், அந்த
காலன் விழ மோது சாமுண்டி பார் அம்பொடு   அனல் வாயு

ஆசை மனத்தனாகி, போகத்தை நுகருகிற நான், தேவர்களும் தேடித் தெரிந்து கொள்வதற்கு அரிதானதும், ஞானத்தினால் அறியப் படும் பொருளாய் நின்றுள்ளதும், [ஞேயம் = ஞானத்தினால் அறியப்படும் பொருள்] (பிராணவாயுவை) மூலாதாரத்தினின்று மேலே உள்ள ஆதாரங்களிற் செலுத்தப்படும் யோக : நெறியை மேற்கொண்டு, அந்நிலையிலேயே இருந்து

நாள் தோறும் மிக்க வேகமாகச் செல்லும் (அப்பிராண) வாயு வின் சேர்க்கையால் எழுகின்ற சிவாக்கினிச் சுவாலை வீச, [வாசி - சுவாசம்] பிராணவாயுவானது அவ்வக்கினியுட் சென்று பொருந்தப் பெற்று, [வாசி அனலூடு போய் ஒன்றி: ... ஆறு ஆதாரங்களின் வழியே கபாலம் வரையில் போய்ச் சேர்ந்து தியானத்தில் - சமாதியில் ஒன்றி] ஆகாயத்தில் - மேலைச் சிவ வீதியிலே - (தாம மதி) நிறைந்த சந்திர மண்டலத்தின் மீதிருந்து ஊறுகின்ற அமிர்த கலையெனும் இனிய அமிர்தப் பொழிவை

நாடி ஆய்ந்து, அந்நிலைக்கும் மேலே போய் நிற்கின்ற ஆனந்தமயமான பரஆகாசப் பெரு வெளியில் ஏறிச் சேர்ந்து, நீ - நான் என்னும் வேற்றுமை இல்லாததும், நாடிப் பார்க்கின் இன்னும் வேறு எதுவும் இல்லாததுமான சூனிய நிலையில் - (எல்லாம் இழந்த நிலையில்) வாழும்படியான பாக்கிய நிலையைப் பெறுகின்ற ஒரு நாளும் உண்டோ!

கரிய விடத்தை உண்டவள், (மதங்கமுனிவருக்குப் புதல்வியாக அவதரித்த) மாதங்கி, வேதங்களால் புகழப்பட்ட பேதை, பெருமை வாய்ந்த நீலி.. (நீலநிறம் உடையவள்), திருவடிகளால், (மார்க்கண்டேயர் உயிரைப் பறிக்க) வந்த காலன் விழும்படி உதைத்து வீழ்த்திய துர்க்கை, நிலம், (அம்பொடு) நீருடன், நெருப்பு, காற்று

காதி முதிர் வானமே தங்கி வாழ் வஞ்சி
ஆடல் விடையேறி பாகங் குலா மங்கை
காளி நடமாடி நாள் அன்பர் தாம் வந்து — தொழுமாது

வாளம் முழுதாளும் ஓர் தண் துழாய் தங்கு
சோதி மணி மார்ப மாலின் பின்னாள், இன்சொல்
வாழும் உமை மாதராள் மைந்தனே, எந்தை — கிளையோனே

மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று
தேடி விளையாடியே அங்ஙனே நின்று
வாழும் மயில் வீரனே, செந்தில் வாழ்கின்ற — பெருமாளே(மு)

(50) பூர்வி கல்யாணி (7) (ட) 1300

வஞ்சம் கொண்டும் திட ராவணனும்
பந்து எண் திண் பரி, தேர், கரி
மஞ்சின் பண்பும் சரியாம் என — வெகு சேனை
வந்து அம்பும் பொங்கியதாக/எ
திர்ந்தும் தன் சம்பிரதாயமும்
வம்பும் தும்பும் பல பேசியும் — எதிரே/கை
மிஞ்சென்றும் சண்டை செய் போது/கு
ரங்கும் துஞ்சும் கனல் போல/வெ
குண்டும் குன்றும் கரடார்/மர — மதும் வீசி

(காதி-காந்தி) பேரொளி மிகுந்த ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களில் (அந்தர்யாமியாக) தங்கி வாழ்கின்ற வஞ்சிக்கொடி போன்றவள், ஆடல் புரியவல்ல விடையின் மேல் வரும் சிவபிரானுடைய பாகத்தில் விளங்குகின்ற மங்கை, காளி, நடனி, நாள் தோறும் அன்பர்கள் வந்து தொழுகின்ற மாது;

சக்ரவாளகிரியால் சூழப்பட்ட பூவுலகம் முழுமையும் (காத்து) ஆளும் ஒப்பற்ற குளிர்ந்த துளப மாலை தங்கும் மார்பனும், சோதி மணியாகிய கவுத்துவமணி அணிந்த மார்பனும் ஆகிய திருமாலின் (பின்னன்) தங்கை. இன்சொல்லே வழங்கும் உமாதேவியாரின் மைந்தனே! எந்தையே! கிளையோனே!

குற்றமற்ற அடியார்கள் வாழ்கின்ற ஊர்களுக்குப் போய் (அவர்கள் இருக்கும் இடத்தைத்)தேடி (அவர்களுடன்) விளையாடி, அங்கேயே நின்று வாழ்கின்ற மயில் வீரனே! திருச்செந்தூரில் வாழ்கின்ற பெருமானே!

(50) வஞ்சக எண்ணம் கொண்டவனும், வலிமை வாய்ந்த இராவணன், பந்து போல் (வேகமாகச் செல்லும்) வலிய குதிரை, தேர், யானை. மேகம் போல் திரண்டு வருகின்ற அனேகம் சேனை கிளைவகளுடன்

வந்து, அம்பின் (கூட்டங்கள்) நிறைந்து எழ, எதிர்த்துத் தனது சாமர்த்தியப் பெருமைப் பேச்சும், வீண் பேச்சும், இழிவான பேச்சும் பல பேசி, எதிரே உள்ள (கை) சேனை (யுடன்)

மிகவும், நாள் முழுவதும் சண்டை செய்த போது, குரங்குச் சேனைகள் நிலை பெற்ற நெருப்புப் போலக் கோபம் கொண்டு, மலைகளையும், கரடு முரடான மரங்களையும் (பிடுங்கி) வீசி

மீண்டும் துங்கங்களிலெ/த
காந்து அங்கம் கம் கர மார் பொடு
மின் சுந்தும் சிந்த நிசாசரர் வகை சேர (அம)
அம். சண்டன் தென் திசை நாடி/ வி
ழுந்(து) அங்கும் சென்று எமதூதர்கள்
உந்து உந்து உந்து என்றிடவே தசை நிணமூளை
உண்டும் கண்டும் சில கூளிகள்
டிண்டிண்டென்றும் குதி போட/ உ
யர்ந்த (அ)ம்பும் கொண்டு வெல் மாதவன் மருகோனே
தஞ்சம் தஞ்சம் சிறியேன் மதி
கொஞ்சம் கொஞ்சம் துரையே, அருள்
தந்து என்று இன்பம் தரு வீடது தருவாயே
சங்கம். கஞ்சம் கயல் சூழ், தடம்
எங்கு எங்கும் பொங்க, மகா மதி
தம் தங்கும் செந்திலில் வாழ்வுயர் பெருமாளே (மு)

போர்த்து எகெக்ப்பட்ட (துங்கங்கள்) மலைகளிலே நொறுங்கி, உடம்பு, (கம்) தலை, கை, மார்பு இவைகளுடன் ஒளி விடும் உடற் பொருத்தங்களையும் சிதற அடித்து, அரக்கர் இனம் முழுமையும்
யமனுடைய தெற்குத் திசையை நாடி விழவும், அங்கும் சென்று, எம தூதர்கள் தள்ளு, தள்ளு, தள்ளு என்று கூறும்படியாக, மாமிசம் (நிணம்) கொழுப்பு, மூளை (இவைகள்)
உண்டும், பார்த்தும் சில பேய்கள் டிண்டிண்டென்று குதித்துக் கூத்தாடவும், சிறந்த அம்புகளைக் கொண்டு வென்ற திருமாலின் மருகனே!
(பெருமானே!) அடைக்கலம், அடைக்கலம், சிறியேனுடைய அறிவு அற்பம் அற்பம், தலைவரே! அருள் பாலித்து எப்போது இன்பம் தருகின்ற (மோக்ஷ) வீட்டைத் தருவாய்!
சங்குகளும், தாமரைகளும், மீன்களும் நிறைந்த, குளங்கள் பல இடங்களிலும் பொலிய, மகா மதிதம் துலங்கும் திருச்செந்தூரில் வாழ்ந்து தங்கும் பெருமாளே!

---

(51) மனைவயம் (16) (ம) ஆதி-உகள

வஞ்சத்துடன் ஒரு நெஞ்சிற் பல நினை
வஞ்சிக் கொடி இடை மடவாரும்
வந்திப் புதல்வரும் அந்திக் கிளைஞரும்
மண்டிக் கதறிடு வகை கூர
அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக்கு இரை என உடன் மேவ

(51) வஞ்சனையுடன், ஒப்பற்ற நெஞ்சிற் பல வித எண்ணங்களையும் கொண்ட, வஞ்சிக் கொடி போன்ற இடையை உடைய
மாதர்களும்
வணங்கும் புதல்வர்களும், நெருங்கிய சுற்றத்தாரும், ஒன்று கூடிக் கதறுகின்ற செய்கை மிகுதியாக
(அஞ்சக்-அம்சம்) [உடலின்] தத்துவப் பகுதிகள் கலந்து பிசிபட்டுப் போகின்ற, பஞ்சு போன்ற புழுக்கள் நிறைந்த உடம்பானது, நெருப்புக்கு இரையென உடனே செல்லும்படி

அண்டிப் பயம் உற வென்றிச் சமன் வரும்
(இ) அன்றைக்(கு) அடியிணை — தரவேணும்
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர் செய்து
கன்றச் சிறையிடும் — அயில் வீர
கண்டு ஒத்தன மொழி அண்டர் திருமயில்
கண் தைத்து அழகிய — திருமார்பா
செஞ் சொற் புலவர்கள் சங்கத் தமிழ் தெரி
செந்திற் பதி நகர் — உறைவோனே
செம்பொற் குல வடகுன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல — பெருமானே

நெருங்கிப் பயப்படும்படி வெற்றி பொருந்திய யமன் வரும் அந்த நாளில் (உனது) திருவடியைத் தரவேணும்.

தாமரையில் (வீற்றிருக்கும்) பிரமன் அஞ்சும்படி அவனுக்குத் துயர் உண்டாக்கி (அவனது) மனம் நோவச் சிறையிலிட்ட வேல் வீரனே!

கற்கண்டுக்கு ஒப்பான மொழியை உடைய, தேவர் குலத்து அழகிய மயில் போன்ற தேவசேனையின் கண் பார்வை பாய்கின்ற அழகிய திருமார்பனே!

செவ்விய சொற்களையுடைய புலவர்களின் குழுவினது, தமிழை ஆராய்ந்து அருள்கின்ற திருச்செந்தூர்ப்பதி என்னும் நகரில் உறைபவனே!

செம்பொன்னைச் சிறந்து, வடக்கே இருந்த கிரௌஞ்ச மலையைக் கடலிடையே சிதறும்படி போர் செய்ய வல்ல பெருமானே!

---

(52) ஸிந்து பைரவி (12) (4) ஆதி-திஸ்ர நடை

வந்து வந்து முன் தவழ்ந்து
வெம் சுகம் நயங்க நின்று
மொஞ்சி மொச்சி என்று அழும் — குழந்தையோடு
மண் தலம் குலுங்க அண்டர்
விண் தலம் பிளந்து எழுந்து
செம்பொன் மண்டபங்களும் — பயின்ற வீடு
கொந்து அளைந்த குந்தளம் த
ழைந்து, குங்குமம் தயங்கு
கொங்கை வஞ்சி தஞ்சமென்று — மங்கு காலம்
கொங்கு அடம்பு, கொங்கு பொங்கு
பைங் கடம்பு, தண்டை கொஞ்சு
செஞ்சதங்கை தங்கு பங்க — யங்கள் தாராய்

(52) அடிக்கடி வந்து, முன்னே தவழ்ந்து, விரும்பத் தக்க இன்பம் விளங்க நின்று, பாச்சி பாச்சி என்று அழுகின்ற குழந்தையும்

பூதலமே (தாங்க முடியாது) குலுங்க, தேவர்கள் வாழும் விண்ணுலகம் வரையிலும் அளாவி எழுந்த செம்பொன் மண்டபங்களுடன் கூடிய வீடு

பூங்கொத்துக்கள் தழுவிய கூந்தல் தழைந்து, குங்குமம் விளங்கும் தனங்களையுடைய வஞ்சிக்கொடி போன்ற மனையாளுமே, நமக்கு ஆதரவு (பற்றுக்கோடு) என்றிருந்த அறிவு மங்கும் சமயத்தில் (இறக்கும் போது)

கொங்கு மலரும், அடம்பு என்ற கொடிப் பூவும், மணம் பொங்கும் பசிய கடம்ப மலரும், தண்டையும், கொஞ்சுவது போல ஒலிக்கின்ற செவ்விய சதங்கையும் தங்கி அழகு செய்கின்ற, தாமரை மலர் போன்ற உன் திருவடிகளைத் தந்தருளாய்.

சந்து, அடர்ந்து எழுந்து அரும்பு
மந்தரம், செழும் கரும்பு,
கந்த (அ)ரம்பை செண்பதங்கொள்   செந்தில் வாழ்வே
தண் கடம் கடந்து சென்று
பண்கள் தங்கு அடர்ந்த இன்சொல்
திண்புனம் புகுந்து கண்டு   இறைஞ்சு கோவே
அந்தகன் கலங்க, வந்து,
கந்தரம் கவந்த, சிந்து
ரம் சிறந்து வந்து அவம்   புரிந்த மார்பா
அம்புனம் புகுந்த நண்பர்,
சம்பு, நன் புரந்தரன், த
ரம் பல் உம்பர், கும்பர் நம்பு   தம்பிரானே.

(53) காம்போதி / ஜம்பை   (7)   (4) (1+½+½+3)

வரி ஆர் கருங் கண்   மடமாதர்
மக(வு) ஆசை தொந்தம்   அதுவாகி
இரு போதும் நைந்து   மெலியாதே
இரு தாளில் அன்பு   தருவாயே
பரிபாலனம் செய்து   அருள்வோனே
பரமேசுரன் தன்   அருள்பாலா
அரிகேசவன் தன்   மருகோனே
அலைவாய் அமர்ந்த   பெருமானே

சந்தன மரம், அடர்த்தியாய் தோன்றி அரும்பு விடும் மந்தாரம், செழிப்புள்ள கரும்பு, கிழங்கோடு கூடிய வாழை (இவைகள்) ஆகாய மட்டும் வளர்ந்து ஓங்கியுள்ள, திருச்செந்தூரில் வாழ்பவனே!

குளிர்ந்த கானகத்தை கடந்து போய், பண் இசைகள் தங்கி நெருங்கியுள்ள இனிய மொழிகளையுடைய (வள்ளி)பிராட்டி யிருந்த, திண்ணிய தினைப்புனத்திற் சென்று, (அந்த அம்மையாரைக்) கண்டு வணங்கிய தலைவனே!

யமன் (அருகில் நெருங்குவதற்கு) கலங்கி அஞ்சும்படியாக, (அருள் கூர்ந்து) வந்து, [கந்தரம்] (அன்பர்களின் இருதய) குகையில் (கலந்து) வீற்றிருந்தருளும், (சிந்துரம்) தெய்வயானையம்மை சிறப்புடன் மகிழ்ந்து (அவம்) திருப்தியுடன் பொருந்தும் திருமார்பனே!

அழகிய வனத்தில் வாழும் முனிவர்களும், சிவனும், நல்ல இந்திரனும் உயர்ந்த பல தேவர்களும், கும்ப முநிவராம் அகத்தியரும் (நம்பு) விரும்புகின்ற தம்பிரானே

(53) ரேகைகள் உள்ள கரிய கண்களை உடைய மடமையும் உடைய மாதர்கள்,
குழந்தைகள் (என்கின்ற) ஆசையாகிய பந்தத்திலே (கட்டிலே) பட்டவனதி இரவும் பகலும் மனம் நைந்து போய் மெலிவு அடையாமல்
(உனது) இரண்டு திருவடிகளின் மீது அன்பைத் தந்தருளுவாயாக
காத்து அளித்து அருள்வோனே!
பரமசிவன் தந்தருளிய குழந்தையே!
ஹரிகேசவராம் திருமாலின் மருகனே!
திருச்செந்தூரில் வீற்றிருந்து அருளும் பெருமானே.

(54) யமுனா கல்யாணி (3½) (ரூ) 2+½

விந்ததின் ஊறி வந்தது காயம்
வெந்தது கோடி, இனிமேலோ
விண்டு விடாமல் உன் பதம் மேவும்
வித்தையர் போல அடியேனும்
வந்து வினாக முன் கலி தீர
வண் சிவ ஞான வடிவாகி
வன் பதம் ஏறி என் களை ஆற
வந்தருள் பாத மலர்தாராய்
என்தன் உள், ஏக செஞ்சுடர் ஆதி
என் கணில் ஆடு தழல்வேணி

எந்தையர், தேடும் அன்பர் சகாயர்
எங்கள் சுவாமி அருள்பாலா
சுந்தர ஞான மென் குற மாது
தன் திருமார்பில் அணைவோனே
சுந்தரமான செந்திலில் மேவு
கந்த சுரேசர் பெருமானே.

சுக்கிலத்தில் ஊறி வந்தது உடம்பு (கோடி), நெருப்பில் வெந்தது கோடி (கோடிக்கணக்கானவை) இனி மேலாவது,

(உன்னை விட்டு) நீங்காமல் இருப்பதற்கு, உன் திருவடியை விரும்புகின்ற கற்றோர் (புலவர்) போல அடியேனும்

நன்னெறிக்கு வந்து. பெரிய அழிவும், பழைய வினை என்கிற கேடும் திரும்படி, வளமான சிவஞான வடிவை அடைந்து

வலிமையான-நிலையான பதவியை அடைந்து. (பிறப்பு இறப்பு என்னும்) எனது களைப்பு நீங்க (நீ) வந்து, திருவருளைப் பாலிக்கும் உனது திருவடி மலரைத் தந்தருளுவாயாக.

எனது உள்ளத்து உள்ளே, ஒப்பற்ற ஒரு செஞ்சோதியாக விளங்கி என் கண்களிற் பொலிந்து திகழும், நெருப்பு நிறமான சடைகளையுடைய

என் தந்தையும், தேடுகின்ற அன்பர்களுக்கு உதவுபவரும், எங்கள் சுவாமியுமான சிவபெருமான் அருளிய குமாரனே!

அழகும், ஞானமும், மென்மையும் உடைய குறமாது வள்ளியின் திருமார்பில் அணைபவனே

அழகிய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் கந்தனே! தேவேந்திரர்க்குப் பெருமானே!

(56) ஜோன்புரி (12) (+) ஆதி-திஸ்ர நடை

வெங்காளம் பாணம் சேல் கண், பால்
மென் பாகு அம் சொல், குயில், மாலை
மென் கேசம் தான் என்றே கொண்டார்
மென் தோள் நன்றப் பொருள் தேடி
வங்காளம் சோனம் சீனம் போய்
வன்பே துன்பப் படலாமோ
மைந்து ஆரும் தோள் மைந்தா அந்தா
வந்தே இந்தப் பொழுது ஆள்வாய்
கொங்கு ஆர் பைந்தேன் உண்டே வண்டு ஆர்
குன்றூர் மின் கொங்கைக்கு இனியோனே
குன்றேழும் சூழ் அம்பு ஏழும் சூ
ரும் போய் மங்கப் பொரு கோபா
கங்காளம் சேர் மொய்ம்பார் அன்பார்
கன்றே, உம்பர்க்கு அருநாதா
கம்பு ஆர் சிந்து ஆர் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் பெருமாளே.

(56) கொடிய நஞ்சு, அம்பு, சேல்மீன் (இவைகளை நிகர்க்கும்) கண்;
பால், மென்மையான பாகு வெல்லம் போன்ற அழகிய சொற்கள் குயிலை
நிகர்க்கும்; மாலை இருள் போலவும்
மெல்லிய கூந்தல் தான் என்று (இவ்வகையாகக்) கொண்டுள்ள
(பொது மாதர்களின்) மெல்லிய தோளைக் கூடுவதற்காகப்
பொருள் தேட வேண்டி
வங்காளம், சோனகம், சீனம் எனப்படும் நாடுகளுக்குப் போய்
(வன்பே) கொடிய துன்பங்கள் படலாமோ!
வலிமை மிக்க தோள்களைக் கொண்ட குமரனே! (அந்தா) அழகனே
வந்து இப்போதே ஆண்டருள்வாயாக!
பூந்தாதுக்களில் உள்ள பசிய தேனை உண்டே வண்டுகள் நிரம்பும்
வள்ளிமலையில் வாழுகின்ற வள்ளியின் கொங்கைக்கு இனியவனே
(ஏழு) மலைகளும், சூழ்ந்துள்ள கடல் ஏழும், சூரனும் பட்டு அழியப்
பொருத கோபம் கொண்டவனே!
எலும்புக் கூட்டை யணிந்த (மொய்ம்பு-தோள்) தோளுடைய வராகிய
சிவபெருமானது அன்பு நிறைந்த குழந்தையே! தேவர்தம் ஒப்பற்ற தலைவனே.
சங்குகள் தவழும் கடலுடன் கூடிய தென் திசையில் வந்து
அமர்ந்தவரே! கந்த சுவாமியே! திருச்செந்தூர்ப் பெருமானே

(55) <u>மாண்ட்</u> (8) (2) <u>ஆதி</u>

விறல் மாரன் ஐந்து மலர் வாளி சிந்த
மிக வானில் இந்து — வெயில் காய
மித வாடை வந்து தழல் போல ஒன்ற
வினை மாதர் தம் தம் — வசை கூற
குற வாணர் குன்றில் உறை பேதை கொண்ட
கொடிதான துன்ப — மயல் தீர
குளிர் மாலையின் கண், அணிமாலை தந்து
<u>குறை தீர வந்து</u> — <u>குறுகாயோ</u>
மறிமான் உகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த — மதியாளா
மலை மாவு சிந்த அலை வேலை அஞ்ச
வடிவேல் எறிந்த — அதிதீர
அறிவால் அறிந்து உன் இரு தாள் இறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் — களைவோனே
அழகான செம்பொன் மயில் மேல் அமர்ந்து
<u>அலைவாய் உகந்த</u> — <u>பெருமானே</u>

(55) யாவரையும் மயக்கும் சக்தியுடைய மன்மதன், ஐந்து மலர்
பாணங்களை (தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம்) செலுத்த, அதிக
மாக, வானத்தில் விளங்கும் நிலவு, வெயில் போலக் காய,
மெல்லிய காற்று (தென்றல்) வந்து, தீப்போல வீசிப் பொருந்த, (வீண்பேச்சை)
தொழிலாகக் கொண்ட மாதர்கள், தம் தம் வசை மொழிகளைக் கூற
குறவர்கள் வாழும் குன்றில் உறைகின்ற (வள்ளி போன்ற-ஜீவான்மா)
பேதைப் பெண் அடைந்த கொடிய துன்ப மயக்கம் தீர
குளிர்ந்த மாலைப் பொழுதில் (வந்து) நீ அணிந்துள்ள மாலையைத்
தந்து, என் குறை தீர வந்து அணுக மாட்டாயா!
இளமானை (மான்குட்டி) உகந்து (ஏந்தும்) இறைவன (சிவபிரான்) (உப
தேசம் பெறவேண்டி) மகிழ்ந்து வழிபாடு செய்த அறிஞனே!
(ஏழு) மலையும், மாமரமாக நின்ற சூரனும், அழியுமாறு, அலை கடல் அஞ்ச
வும் கூரிய வேலைச் செலுத்தின அதிதீரனே!
மெய்யறிவினால் உன்னை அறிந்து உனது இரு தாளையும் வணங்கும்
அடியார்களுடைய இடர்களைக் களைபவனே
அழகிய செம்பொன் மயில் மேல் அமர்ந்து, திருச்செந்தூரில்
மகிழ்ந்து வீற்றிருக்கும் பெருமானே!